பக்கங்கள் : பன்னிரண்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 12 வெள்ளிக்கிழமை (26.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 179

# வளைகுடா நாடுகளும் புலிகளை தடை செய்ய முன்வரவேண்டும்!

## வெளிவிவகார அமைச்சர் மங்கள இப்படி வற்புறுத்திக் கேட்கிறார்

கட்டார், மே 26

**விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்திருப்பது போன்று வளைகுடா நாடுகளும் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்து வளைகுடா நாடுகளிலுள்ள அவர்களின் வங்கிக் கணக்குகளை முடக்க வேண்டுமென்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.**

கட்டாரின் தலைநகர் டோஹாவில் நடைபெறும் ஆசிய நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர் மங்கள சமரவீர, கட்டாரின் பிரதிப் பிரதமரும், வெளிவிவகார அமைச்சருமான ஹேய்க் ஹமாட் பின் ஜெஸிம் பின் - ஜபெர் அல்தானியை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதனையடுத்துச் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே அமைச்சர் மங்கள சமரவீர மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

கட்டாரில் பெருமளவில் வாழும் தமிழர்கள் விடுதலைப் புலிகளின் ஒரு சில உறுப்பினர்களால் அச்சுறுத்தப்படுகின்றனர் எனத்

(02 ஆம் பக்கம் பார்க்க)

## போவர் கொழும்பில் பேச்சு

கொழும்பு, மே 26

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹான்ஸன் போவர், நேற்றுக் கொழும்பில் அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் கலாநிதி பாலித கொஹோன்னவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

ஸ்தம்பித்துப் போயுள்ள அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது குறித்து இந்தச் சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டிருப்பதாக அரச சமாதானச் செயலக வட்டாரங்கள் கூறின.

இதேவேளை, அமைதி முயற்சிகளுக்குப் பொறுப்பான நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் இன்று கொழும்பு வரவுள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 2 கான்ஸ்டபிள்கள், 2 ஊர்காவலர்கள் காத்தான்குடியில் கிளைமோரில் பலி

ஏறாவூர், மே 26

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவில் பொலிஸாரை இலக்கு வைத்து நேற்று மேற்கொள்ளப்பட்ட இரண்டு வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களும், இரு ஊர்காவலர்களும் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

முதலாவது தாக்குதல் சம்பவம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்றதாகக் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர். சர்ச்சைக் குரிய காத்தான்குடி பள்ளிவாசலொன்றுக்குப் பாதுகாப்புக் கடமைக்குச் சென்றிருந்த பொலிஸாரை ஏற்றி வந்த பொலிஸ் வான் ஒன்றை இலக்கு வைத்து கிளைமோர்க் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் வானில் பயணம் செய்த

(02 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் - குளப்பிட்டி வீதியில் கிளைமோர் சிப்பாய் ஒருவரும் பொதுமகனும் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,மே 26

கொக்குவில் குளப்பிட்டி - ஆனைக்கோட்டை வீதியில் - கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலைக்கு முன்பாக நேற்று மாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் சிக்கி சிப்பாய் ஒருவரும் பொதுமகன் ஒருவரும் உயிரிழந்தனர்.

வீதி ரோந்தில் ஈடுபட்ட படையினரை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கிளைமோர் வெடித்ததைத் தொடர்ந்து தொடர்ச்சியாக அந்தப் பகுதியில் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

குறிப்பிட்ட பாடசாலைக்கு முன்பாக அமைந்துள்ள கடை ஒன்றின் அருகே மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோரே

(12ஆம் பக்கம் பார்க்க)

## செட்டிக்குளத்தில் கிளைமோரில் சிக்கி 3 சிப்பாய்கள் காயம்

வவுனியா, மே 26

மன்னார் - மதவாச்சி வீதியின் செட்டிக்குளம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் இராணுவச் சிப்பாய்கள் மூவர் படுகாயமடைந்தனர்.

செட்டிக்குளம் பகுதியில் காவல் கடமைகளில் ஈடுபட்டிருந்த இராணு வத்தினருக்குக் காலை உணவு வழங்குவதற்காக டிராக்டரில் சென்று கொண்டிருந்த படைச் சிப்பாய்களே கிளைமோரில் சிக்கினர்.

காயமடைந்த சிப்பாய்கள் மத வாச்சி

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புக் கவுன்ஸிலுக்குப் பிரதிநிதியை நியமிக்கும் உரிமை ஜே.வி.பிக்கு அல்ல; தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே உரியது!

### சபாநாயகரிடம் சட்டமா அதிபர் தெரிவிப்பு

அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு ஒரு பிரதிநிதியை நியமிக்கும் உரிமை தங்களுடையதே என்று ஜே.வி.பியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இழுபறிப்படுகையில் -

அந்த உரிமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே உரியது என்று சட்ட விளக்கம் கொடுத்திருக்கின்றார் சட்டமா அதிபர்.

இந்த விவகாரம் குறித்து சபாநாயகர் சட்ட விளக்கம் கோரி அனுப்பிய கடிதத்துக்குத் தாம் எழுதிய பதிலிலேயே சட்டமா அதிபர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் மூலம் 'அரசமைப்புக் கவுன்ஸில்' உருவாக்கப்படுகின்றது.

பல்வேறு கட்சிகள் சார்பிலும், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதி ஆகியோர் சார்பிலும் இந்த அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு பிரதிநிதிகள் நியமிக்கப்படுகின்றனர்.

இந்த அரசமைப்புக் கவுன்ஸிலே பின்னர் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்சம், ஊழல் ஆகியவற்றை விசாரிப்பதற்கான

(02 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று 63 அகதிகள் தமிழகம் வந்தனர்

இராமேஸ்வரம், மே 26

இலங்கையிலிருந்துமேலும் 63 அகதிகள் நேற்று இராமேஸ்வரத்துக்கு வந்திருக்கின்றனர்.

பேசாலை மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளில் இருந்து வந்த இந்த அகதிகளில் 36 பேர் தனுஷ்கோடியிலும், 22 பேர் தங்கச்சிமடத்திலும், ஐந்து பேர் மண்டபம் பகுதியிலும் படகுகளில் வந்திறங்கினர்.

இந்த அகதிகளின் எண்ணிக்கையுடன் கடந்த ஜனவரியிலிருந்து தமிழகத்திற்கு அகதிகளாக வந்தோரின் எண்ணிக்கை 1,842 ஆக உயர்ந்திருக்கிறது. நேற்று வந்த அகதிகள் பொலிஸாரின் விசாரணையின் பின்னர் மண்டபம் முகாமுக்கு அனுப்பப்பட்டனர். (க)

## களமுனைத் தளபதி வீரமணி வெடிவிபத்தில் உயிரிழப்பு!

கிளிநொச்சி, மே 26

விடுதலைப் புலிகளின் சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவின் களமுனைத் தளபதிகளில் ஒருவரான லெப்டினன்ட் கேணல் வீரமணி தவறுதலான வெடி விபத்து ஒன்றில் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் மாலை நாகர்கோவில் முன்னரங்க நிலைப் பகுதியில் நின்றிருந்த வேளை கைக்குண்டு ஒன்று தவறுதலாக வெடித்ததிலேயே இவர் உயிரிழந்

(12ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தியபோது

## ஜனாதிபதியைச் சந்தித்துவிட்டு சொல்ஹெய்ம் புதுடில்லிக்கு!

''சமாதான முன்னெடுப்புகளுக்கு புத்துயிர் அளிக்குமுகமாக இலங்கை அரசாங்கத்துடனும், விடுதலைப் புலிகளுடனும் பேசுவதற்கு கொழும்பு வரும் நோர்வே அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் இலங்கை புறப்படுவதற்கு முன்னதாக இங்கு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் -

'இலங்கை நிலைவரங்கள் வில்லங்கமானவை. எனவே, நடைமுறைச் சாத்தியப்படாத விஷயங்களை எதிர்பார்க்காமல் இருக்க வேண்டும். இது முக்கியமானது'' - என்று தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இன்று வெள்ளிக்கிழமை சந்தித்

(02 ஆம் பக்கம் பார்க்க)

## களுவாஞ்சிக்குடி கடைகளை 2 நாட்களுக்கு மூடப் பணிப்பு!

களுவாஞ்சிக்குடி, மே 26

களுவாஞ்சிக்குடி நகரில் அனைத்துக் கடைகளையும் அடுத்த இரண்டு தினங்களுக்கு மூடிவிடுமாறு நேற்று உத்தரவிட்டிருக்கும் விசேட அதிரடிப் படையினர் நேற்றுத் திறந்திருந்த கடைகளின் உரிமையாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் ஊர்காவலர் மீது திருமலையில் சூடு

பண்குளம், மே 26

திருகோணமலை - அனுராதபுரம் வீதிச் சந்தியில் நேற்றுக் காலை 10.20 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் சீனக்குடாப் பகுதியில் கடமையாற்றிய முன்னாள் ஊர்காவல் படை வீரரான கமூர்த்தீன் ஆசாத் (வயது - 26) என்பவர் படுகாயமடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மங்கையர்க்கரசி அன்னைக்கு நேற்று இறுதி அஞ்சலி



அன்னையின் பூதவுடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருப்பதையும் அவரது கணவர் அஞ்சலி செலுத்துவதையும் இறுதியாத்திரையையும் படங்களில் காணலாம்.



**செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன்:-**

கல்விக்கும் சைவத்துக்குமெனத் தனது வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்தவர் அமரர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம். இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்றாகும்.

அன்னையவர்கள் தெல்லிப்பளையில் உள்ள துர்க்கா மகளிர் இல்லத்துக்குச் செய்த பணிகள் அளப்பரியது. அந்த இல்லம் இடம்பெயர்ந்து நிர்க்கதியாக நின்றவேளை அதனை இராமநாதன் கல்லூரியில் இயங்குவதற்குப் பெருமனதுடன் இடமளித்தார். சைவத்துக்கும் தமிழுக்கும் அவர் செய்த பணிகள் அளப்பரியன.

இராமநாதன் கல்லூரியின் வரலாற்றை அடிக்கடி அன்னை ஞாபகப்படுத்துவார். அதன் கல்விச் சாதனைகளுக்கு அவர் உறுதுணையாக இருந்தவர். இப்படியான ஒரு தியாகியை நாம் இன்று இழந்து நிற்கின்றோம். சைவ உலகும் வேதனையடைகின்றது.



**இராமநாதன் கல்லூரி ஆசிரியையை திருமதி கணேச பிள்ளை:-**

நாம் ஒரு துணையை இன்று இழந்து நிற்கின்றோம். இராமநாதன் ஒரு இலட்சியப் பெண்ணை உருவாக்கினார். அவர் தான் மங்கையர்க்கரசி. சைவ ஆசாரப்படி ஒழுகியவர் அவர். கல்வி உலகில் அவர் புரிந்த சாதனைகளை அளவிட முடியாது. அவர் ஒரு தூய மனப்பான்மை கொண்ட ஆசிரியரும் கூட.



**மயிலணிப் பாடசாலை அதிபர் சிவநேசன்:-**

எமது பாடசாலை அன்னையின் முன்னோரால் உருவாக்கப்பட்டது. நான் இந்தப் பாடசாலைக்குப் புதிய அதிபராக வந்த போது என்னை அழைத்து பாடசாலையை முன்னேற்றுவது பற்றிய நுட்பங்களை அவர் சொல்லித் தந்தார். நல்ல பிரஜைகளை உருவாக்குவது என்ற சொல்லைத் தாரக மந்திரமாக ஏற்றுப் பணி செய்த பரம்பரையில் வந்தவர் அன்னை. இன்று நாங்கள் அவரை இழந்து துயருறுகின்றோம். அவருடைய உருவம் தான் இன்று எங்களிடத்தில் இருந்து மறைந்திருக்கின்றது. ஆனால் அவரின் பணிகள் மறையவில்லை.

**ஈழநாடு பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் சிவானந்தன்:-**

சுன்னாகம் தமிழ் இலக்கியம் வளர்ந்த ஊர். அந்த ஊரிலே பிறந்து பணிசெய்து இன்று அன்னையவர் மறைந்துவிட்டார். தமிழும் சைவமும் வளர அவர் ஆற்றிய சேவையை எம்மால் மறந்துவிட முடியாது. எனவே, அவரது ஆத்மா சாந்தியடைய நாம் அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து செய்வோம்.



**யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்:-**

உலகத்தில் பலர் இறக்கின்றார்கள். ஆனால் சிலருடைய இறப்பு தாங்கிக்கொள்ள முடியாதது. அன்னை மங்கையர்க்கரசி தனக்காக வாழாது பிறருக்காக வாழ்ந்தவர். சமூக, சமய, கல்விப் பணிகளில் தனது வாழ்வை முழுமையாக அர்ப்பணித்துச் சேவை செய்தவர். 10 ஆண்டுகள் அவர் எமது பல்கலைக் கழகப் பேரவையில் இருந்து கல்விப் பணி புரிந்தவர். அங்கு அவருக்கு ஒரு தனி மரியாதை இருந்தது. அத்துடன் பல விடயங்களில் அவர் எமக்கு முன்னுதாரணமாகவும் திகழ்ந்தார். இறக்கும்வரை அவர் தனது கல்விப் பணியைத் தொடர்ந்து ஆற்றினார். அவரை நாம் இன்று இழந்துவிட்டோம்.

**உதயன் நிறுவனத்தின் மேலாண்மைப் பணிப்பாளர் ஈ.சரவணபவனின் செய்தியை 'உதயன்' ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த எஸ்.பெருமாள் வாசித்தார். அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-**

திருவாட்டி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலத்தின் திடீர் மறைவு எனக்கும் என் குடும்பத்தினருக்கும் என்னுடைய நிறுவனத்துக்கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதோடு எம்மைப் பெரும் துயரிலும் ஆழ்த்தியிருக்கிறது.

திருவாட்டி மங்கையர்க்கரசியவர்கள் சைவசமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடும், பக்தியும், நிகரற்ற புலமையும் அவர் பல்துறையிலும் ஈட்டிய பேறிவுக்கு மேலும் அரண் சேர்ந்து விளங்கின. யாழ்.பல்கலைக்கழகத்தில் பேரவையின் (Council member) உறுப்பினராகப் பணியாற்றியபோது தனது விழுமிய கருத்துகளை, எப்பக்கமும் கோடாது, தனக்கே உரிய தனித்துவத்தோடும், நடுநிலையோடும், செழுமையான மொழியில் உரைத்து எல்லோருடைய உள்ளங்களையும் கவர்ந்ததோடு, எவரையும் புண்படுத்தாத தனது பெருந்தன்மையால் பல சிக்கல்களின் சுமுகமான தீர்வுக்கும் வழிசமைத்தவர் அவர் - என்றுள்ளது.

## வளைகுடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிகிறது. ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்திருப்பதுபோல் வளைகுடா நாடுகளும் புலிகளைத் தடைசெய்ய வேண்டும். பேச்சு மேசைக்குப் புலிகளை மீண்டும் கொண்டு வருவதற்கு சர்வதேச சமூகம் முழு அளவில் அழுத்தங்களை வழங்க வேண்டும். ஏனெனில், இணக்கப்பாட்டுத் தீர்வைத் தவிர வேறு எதனையும் நாம் எதிர்பார்க்கவில்லை.

ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரை அவர்கள் புலிகளைத் தடைசெய்வதுடன் நின்றுவிடாமல் புலிகளின் அலுவலகங்களை மூடி, அவர்களின் சொத்துகளை முடக்கவேண்டும். புலிகள் அந்த நாடுகளில் நிதி சேகரிப்பதற்கான வாய்ப்பை முதலில் நிறுத்தவேண்டும். புலிகளின் ஆதரவாளர்கள் என்ற ரீதியில் தமிழர்களெல்லாம் புலிகளுக்கு நிதியுதவி வழங்குவதில்லை. அவர்கள் நிதி வழங்குமாறு அச்சுறுத்தப்படுகிறார்கள். - என்று கூறினார் அமைச்சர் மங்கள சமரவீர.

## 2 கான்ஸ்டபிள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு பேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். டபிள்யூ. ஜெயந்த (வயது-38), எம். நவரத்தின (வயது-41), கே. இராமநாதன் (வயது-39), எம். பதுர்தீன் (வயது-36) ஆகியோரே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களாவர்.

காத்தான்குடி, மஞ்சத்தொடுவாய் பெற்றோல் நிரப்பு நிலையத்துக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது தாக்குதல் சம்பவத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் படுகாயமடைந்தார். அவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எம். மல்லவராய்ச்சி (வயது-42) என்பவரே இச்சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார். பொலிஸாரின் அவசர சேவை ஜீப் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போதே இவர் காயமடைந்துள்ளார். விசாரணை ஒன்றை முடித்து விட்டுத் திரும்பிக்கொண்டிருந்த ஜீப் மீது வீதியில் மறைந்திருந்த இளைஞர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவங்கள் இடம்பெற்ற பிரதேசங்களில் பொலிஸார் உடனடியாகத் தேடுதல்களை மேற்கொண்ட போதிலும் எவரும் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. (க)

### வடமராட்சியில் மினிபஸ் மோதியதில் உயிரிழந்த

# தீவக கல்விப் பணிப்பாளரின் மனைவிக்கு ரூ. 5 லட்சம் நஷ்டஈடாக வழங்க தீர்ப்பு

நெல்லியடியில் தனியார் பஸ் மோதி மரணமான தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வேணுகோபால் வாணிதாஸனின் மனைவிக்கு 5 லட்சம் ரூபாவை நஷ்டஈடாக வழங்குமாறு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.தியாகேந்திரன் உத்தரவிட்டார்.

2004 ஒக்டோபர் மாதம் நெல்லியடியில் தனியார் பஸ் வண்டியை அதிவேகமாகவும் அவதானமின்றியும், அக்கறையின்றியும் செலுத்தி வேணுகோபால் வாணிதாசன் என்பவருக்கு மரணத்தை விளைவித்ததுடன் -

கதிர்காமன் தம்புநாதன், கந்தையா மகேஸ்வரன் ஆகியோருக்கு காயங்கள் விளைவித்ததாகவும் சட்டமா அதிபரினால் செல்வம் சுதாகர் என்பவருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணை நேற்று மேல் நீதிமன்ற நீதிபதி கே.தியாகேந்திரன் முன்னிலையில் நடந்தது. வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ்.சிவனேசன் இவ்வழக்கின் எதிரி தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொள்கிறார் என்றும்-

25 வயது நிரம்பியவர் என்றும், பொறுப்பு மிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும் -

சம்பவம் நடைபெற்ற அன்று மழை பெய்து கொண்டிருந்ததென்றும் -

3 மாத காலத்திற்குள் இறந்தவரின் மனைவிக்கு ஐந்து லட்சம் ரூபாவை நஷ்டஈடாக செலுத்த முன்வந்திருக்கிறார் என்றும் மன்றுக்குத் தெரிவித்து மேற்கூறிய விடயங்களையும் கருத்திற்கொண்டு எதிரிக்கு தண்டனை வழங்குமாறு மன்றைக் கோரினார்.

அரச சட்டவாதி ட.எஸ்.சூசைதாசன் எதிரி தரப்பு சட்டத்தரணியால் செய்யப்பட்ட சமர்ப்பணத்தை தான் ஆட்சேபிக்கவில்லை எனத் தெரிவித்து மன்றினை பொருத்தமான தண்டனையை வழங்கும்படி கோரினார்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் தொடர்ந்து நீதிபதி பின்வருமாறு தீர்ப்பளித்தார்.

* 2 ஆவது சாட்சியும் மரணமடைந்தவரின் மனைவியுமான வேணுகோபால் வாணிதாசனின் மனைவி சற்குணதிலகம் என்பவருக்கு எதிரி ரூ. 5 லட்சம் நஷ்ட ஈடாக வழங்க வேண்டும். இதற்கு 24.08.2006 வரை கால அவகாசம் வழங்கப்படுகிறது.
* முதலாவது குற்றச்சாட்டுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத் தண்டனை.
* 2 ஆவது, 3 ஆவது குற்றச்சாட்டுகளுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தலா ஆறு மாத கடூழியச் சிறைத் தண்டனை.
* எதிரி நஷ்ட ஈட்டை செலுத்தத் தவறின் மேலும் 2 வருட சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும்.
* எதிரி ரூ. 50 ஆயிரம் பெறுமதியான இருவரின் ஆள் பிணையில் செல்ல வேண்டும்.

### அல்லைப்பிட்டி வயோதிபர் படுகொலை

# விசேட குழு மூலம் புலன்விசாரணை நடத்தி சந்தேக நபர்களை முன்நிறுத்த உத்தரவு

யாழ்ப்பாணம்,மே 26

அல்லைப்பிட்டியில் கடந்த ஏப்ரல் மாதம் 30 திகதி வயோதிபர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விசேட குழு அமைத்து புலன் விசாரணை நடத்தி சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு நேற்று உத்தரவிடப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிவானாக பதில் கடமையாற்றிய யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், பொலீஸ் மா அதிபர் மற்றும் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு இந்த உத்தரவை விடுத்துள்ளார்.

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த இராசமணி சங்கரப்பிள்ளை (வயது - 74) என்ற வயோதிபரின் மரணம் தொடர்பான மரண விசாரணைகளை அவர் நடத்தியிருந்தார்.

இந்த மரண விசாரணையில் சாட்சியமளித்த இருவர் கடற்படையினரே சுட்டனர் எனக் குறிப்பிட்டுள்ளனர். எனவே, விசேட பொலீஸ் குழுவொன்றை அமைத்து புலன்விசாரணை நடத்தி சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டுமென நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

காங்கேசன்துறையிலுள்ள சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் [illegible] அதிகாரிகளைக் கொண்ட [illegible] வேண்டும் என்றும் - நீதிவான் உத்தரவிட்டார்.

# அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிரந்தர ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை வரையறை ஆணைக்குழு ஆகியவற்றுக்கான ஆணையாளர்களை நியமிக்கும்.

இதனால், இந்த அரசமைப்புக் கவுன்ஸிலுக்கான பிரதிநிதிகளை நியமிப்பதில் அரசியல் கட்சிகள் போட்டி போடுகின்றன.

அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தின்படி அரசமைப்புக் கவுன்ஸிலுக்குப் பின்வருவோர் உறுப்பினர் களாக இருப்பர்.

* பிரதமர்.
* சபாநாயகர்.
* நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்.
* ஜனாதிபதி நியமிக்கும் ஒரு பிரதிநிதி.
* பிரதமரினதும், எதிர்க்கட்சித் தலைவரினதும் சிபாரிசுகளின் பேரில் ஜனாதிபதி நியமிக்கும் ஐவர்.
* பிரதமர் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர்களின் கட்சியை அல்லது குழுவைச் சாராத ஏனைய கட்சிகளைச் சார்ந்த எம்.பிக்களில் அனேகரினால் சிபாரிசு செய்யப்பட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஒருவர்.

- இந்தப் பத்துப் பேரையும் கொண்ட அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு சபாநாயகர் தலைவராக இருப்பார் என்றும் 17 ஆவது திருத்தம் கூறுகின்றது.

ஆனால், இந்தக் கவுன்ஸிலின் பத்தாவது உறுப்பினரை நியமிப்பதில் ஏற்பட்ட இழுபறி காரணமாக அரசமைப்புக் கவுன்ஸில் இன்னும் செயற்பட முடியாத நிலை காணப்படுகின்றது; இழுபறி நீடிக்கின்றது.

இந்நிலை நீடிப்பதால் அரசமைப்புக் கவுன்ஸிலை அமைக்க விரைந்து நடவடிக்கை எடுக்கும்படி எழுத்து மூலம் சபாநாயகரைக் கோரிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அதன் பின்னரும் காலதாமதம் நீடித்ததால் - அரசமைப்புக் கவுன்ஸிலுக்காகக் காத்திராமல் - சுயாதீன ஆணைக்குழுக்களுக்குத் தாமே ஆணையாளர்களை நியமிக்கத் தொடங்கியிருக்கிறார்.

அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு பத்தாவது உறுப்பினரை நியமிக்கும் அதிகாரம் யாருடையது என்பதில் ஜே.வி.பியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உரிமை கோரி இழுபறிப்படுவதே அந்த இடத்துக்கு யாரை நியமிப்பது என்பதில் சிக்கல் ஏற்பட்டதற்குக் காரணமாகும்.

''பிரதமர் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர்களின் கட்சியை அல்லது குழுவைச் சாராத ஏனைய கட்சிகளைச் சார்ந்த எம்.பிக்களில் அனேகரினால் சிபாரிசு செய்யப்படுபவரே இந்த உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்படுவார்'' என்பதால் -

39 எம்.பிக்களைக் கொண்ட ஜே.வி.பியும், 23 எம்.பிக்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அந்த உரிமையைக் கோரி நிற்கின்றன.

ஆனால், கடந்த பொதுத் தேர்தலில் ஒரே பட்டியலில் - வெற்றிலைச் சின்னத்தில் - ஆளும் கட்சியுடன் சேர்ந்து போட்டியிட்ட ஜே.வி.பி., ஆளும் தரப்பு மூலமே 39 எம்.பிக்களைப் பெற்றிருப்பதால் அக்கட்சியின் எம்.பிக்களை, பிரதமரின் கட்சியைச் சேர்ந்தவர்களாகவே கொள்ள வேண்டும் என்று வாதிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அதனால் கவுன்ஸிலுக்கு பத்தாவது உறுப்பினரை நியமிக்கும் அதிகாரம் தமிழ்க் கூட்டமைப்புக்கே உரியது என்று உரிமை கொண்டாடுகின்றது. இந்தச் சிக்கல் குறித்து சட்ட விளக்கம் தரும்படி சபாநாயகர் லொக்குபண்டார, சட்டமா அதிபர் கே.ஸி.கமலசபேசனிடம் எழுத்து மூலம் கோரினார் என்றும் -

அதற்குப் பதில் அனுப்பியுள்ள சட்டமா அதிபர், அந்த உரிமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே உள்ளது என்று அதில் தெரிவித்திருக்கிறார் என்றும் - அறியவந்தது.

# ஓய்வு பெறும் மேஜர் ஜெனரல் திருமலை அரச அதிபராகிறார்

திருகோணமலை மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் ரஞ்ஜித் சில்வாவை நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் கூடிய அமைச்சரவை இதற்கான அனுமதியை வழங்கியிருக்கின்றது. திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளை தற்போதிருப்பதை விட வினைத்திறனுடன் முன்னெடுக்கும் நோக்கிலேயே இந்த நியமனம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிபாரிசின் பேரில் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே, வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக படைத்தரப்பின் ஓய்வுபெற்ற உயரதிகாரியொருவர் நியமிக்கப்பட்டிருக்கும் [illegible] மாவட்ட அரச அதிபர் [illegible] இராணுவ உயரதிகாரியொருவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. (க)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப் பேசவிருக்கும் எரிக் சொல்ஹெய்ம் பின்னர் புதுடில்லி சென்று இலங்கை விவகாரம் குறித்து இந்திய அதிகாரிகளுடன் பேசவிருக்கிறார்.

'' எமது இலங்கை விஜயம், இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் டோக்கியோவில் மே 30 ஆம் திகதி நடைபெறுகிறது என்பதால் மிக இன்றியமையாததாகும்.' - என்றும் எரிக்சொல்ஹெய்ம் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# வரலாற்றுக் கட்டம் இது!

சர்வதேச பொலீஸ்காரனான அமெரிக்கா மற்றும் அந்தப் பணியில் அதன் 'எடுபிடி'யான பிரிட்டன் போன்றவற்றின் வழிநடத்தலில்தான் விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத் தடைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

சர்வதேச ரீதியில் பல இடங்களிலும் தாம் பயன்படுத்திய Aggressive Diplomacy ஐ (மூர்க்கத்தனமான அல்லது வன்போக்கு இராஜதந்திரத்தை) இலங்கைப் பிரச்சினைக்குள்ளும் புகுத்தி விளையாட முயற்சிக்கின்றன சர்வதேச வல்லாதிக்க சக்திகள்.

வெறும் ஐரோப்பிய ஒன்றியத் தடைதானே, இதற்கு ஏன் இவ்வளவு ஆரவாரம், கிளர்ச்சி, சீற்றம் என்றெல்லாம் சில தரப்புகளில் கேள்வி எழுப்பப்படுகின்றது.

ஏற்கனவே, அமெரிக்காவில், பிரிட்டனில், இந்தியாவில், கனடாவில், ஆஸ்திரேலியாவில் எல்லாம் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுத்தானே இருக்கின்றது? அதனால், புலிகளுக்கு ஏதேனும் பெருங்குறை நேர்ந்து விட்டதா? பாதிப்பு ஏற்பட்டு விட்டதா? புலிகளின் செயற்பாடுகள் அதனால் முடங்கிப்போய் விட்டனவா? அந்த வரிசையில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலும் தடைவந்து விட்டுப் போகட்டுமே. அதனால், புலிகளுக்கு என்ன நஷ்டம்? - என்றெல்லாம் சிலர் கேள்வி எழுப்பாமல் இல்லை.

அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் போல ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் வாழும் புலம் பெயர் ஈழத் தமிழர்களின் முழு மூச்சான - ஆத்மார்த்தமான - ஆதரவும், பக்கபலமும் தமிழர்களின் ஏக, அதிகாரபூர்வப் பிரதிநிதிகளான புலிகளுக்கு இருக்கும்போது இந்தத் தடை வந்து எதைச் சாதிக்கப் போகின்றது? இந்த நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்களின் ஆதரவையும், உதவிகளையும் புலிகளுக்கு இந்தத் தடை அதிகரிக்கச் செய்யுமே தவிர குறைக்காது - என்றெல்லாம் கூறப்படுகின்றது.

இந்தக் கூற்றுக்களில் உண்மை - யதார்த்தம் - இருந்தாலும், ஐரோப்பிய ஒன்றியத் தடையை இதற்கு அப்பால் வேறு கோணங்களிலும் நாம் நோக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

தனி ஒரு நாடு அல்ல. புலம் பெயர்ந்த தமிழர்கள் லட்சக் கணக்கில் ஒன்று கூடி வாழும் மேற்குலக நாடுகள் பல உட்பட இருபத்தியைந்து நாடுகள் ஒன்று கூடி தமிழர்களுக்கு எதிராக எடுக்கக் கூடிய முடிவு இது என்பதால், இதற்கு முன்னர் தனித் தனி நாடுகள் எடுத்த முடிவுக்கு அப்பால், மோசமான விடயமாக இதைத் தமிழர்கள் கருத வேண்டியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவு வெறும் தடையாக வந்திருந்தால் கூட அதை ஏனைய சில நாடுகளில் விதிக்கப்பட்ட தடைகளோடு பத்தோடு பதினொன்றாகக் கருதி ஒதுக்கிவிட முடியும். ஆனால், அது அப்படியல்ல என்பதுதான் விடயம்.

இந்தத் தடை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானம், ஈழத் தமிழர்கள் தங்கள் தலைவிதியைத் தாங்களே நிர்ணயிக்கும் அடிப்படைச் சுதந்திர உரிமையில் கைவைக்கும் - தலையிடும் - வகையில் அத்துமீறல் போக்கில் அமைந்திருப்பதுதான் தமிழர் தரப்பை வேதனையிலும், விரக்தியிலும், விசனத்திலும் - இவற்றுக்கு அப்பால் சீற்றத்திலும் - ஆழ்த்தியிருக்கின்றது.

வன்முறையைக் கைவிடுங்கள், யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடியுங்கள், அமைதிப் பேச்சுக்குப் போங்கள், சமாதானத் தீர்வு காண்பதற்கான எத்தனங்களில் நேர்மை சுத்தியுடன் ஈடுபடுங்கள் - என்றெல்லாம் தமிழர் தரப்பைப் பார்த்து அந்தத் தீர்மானம் வலியுறுத்தியிருக்குமானால் அது பொதுவான - நியாயமான - வற்புறுத்தல் என்று கருதி அதனைப் பொருள் கொண்டிருக்கலாம்; கருத்தில் எடுத்திருக்கலாம்.

ஆனால், அதை எல்லாம் தாண்டி - பேச்சு மேசையில் தமிழர் தரப்பு தீர்மானிக்க வேண்டிய விவகாரங்களைத் தனது விடயங்களாக எடுத்துக் கொண்டு தனது முடிவுகளைத் தமிழர் மீது திணிக்க முயல்கிறது சர்வதேச உலகம்.

ஆயுதங்களைக் கையளிக்கத் தயாராகுங்கள், இறுதித் தீர்வைக் காணவேண்டிய வேளை வந்து விட்டது, தமிழர் தரப்பின் ஏகப்பிரதிநிதிகள் அல்லர் புலிகள், மற்றைய கட்சிகள் மற்றும் குழுக்களுக்கு பிரதிநிதித்துவம் உண்டு - என்றெல்லாம் கட்டுப்பாடுகளை - மட்டுப் படுத்தல்களை - இந்த விவகாரத்துக்குள் போடமுயலும் விதத்தில் ஐரோப்பிய ஒன்றியத் தடைக்கு அடிப்படையான ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றின் தீர்மானம் அமைந்திருக்கின்றது.

இந்தப் போக்கு, தனது அரசியல் தலைமையையும், தலைவிதியையும் தானே நிர்ணயித்துக் கொள்ளும் தமிழ் இனத்தின் சுயாதீன உரிமையில் அப்பட்டமான தலையீடின்றி வேறில்லை. தமிழர்களின் அரசியல் தலைவிதிக்கு வரம்புகளைத் திணிக்கத் துணியும் சர்வதேச சமூகத்தின் இத்தலையீடு, அதனை எட்டுவதற்கான ஒரு நெருக்குவாரமாக - புலிகளைக் கட்டுப்படுத்தி அமுக்கும் ஒரு நகர்வாக - இந்தத் தடைத் திட்டத்தையும் முன்மொழிகின்றது.

ஈழத் தமிழ் மக்களின் அரசியல் விடுதலைப் போராட்ட இலட்சியப் போக்கில் முறையற்ற விதத்தில் - எல்லை மீறி - சர்வதேச சமூகம் தலையிட எடுக்கும் இந்த முயற்சியைத் தமிழினம் முழு மூச்சில் எதிர்க்கும்.

தமிழினத்தின் இந்தச் சுதந்திர உரிமையில் ஆக்கிரமிப்பு சிங்கள அரசு மட்டுமல்ல, சர்வதேச சக்திகள் தலையிட்டாலும் ஒரே பாணியில்தான் அதை விடுதலைப் புலிகள் கையாள்வார்கள் என்பதுதான் கடந்த கால சரித்திரம். அது அரசியல் நோக்கர்களுக்கு நன்கு தெரிந்த விடயம்.

ஐரோப்பிய ஒன்றியத் தடை முஸ்தீபு மட்டுமல்ல, உதவும் நாடுகளின் 2003 ஜூன் டோக்கியோ மாநாட்டுப் பிரகடனமும் கூட இதேபோன்று எல்லை மீறிய உத்தியே. அதை முறியடித்து வலுவிழக்கச் செய்தமை போலவே இப்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் பெயரில் வரும் தலையீட்டு எத்தனத்தையும் எதிர்த்துத் தாண்டவேண்டியது - கடந்து செல்ல வேண்டியது - தமிழரின் விடுதலைப் போராட்ட வரலாற்றின் தவிர்க்க முடியாத கட்டமாக - கட்டாயமாக - வந்திருக்கின்றது.

சுதந்திரத்துக்கான தனது வேட்கையின் அதே உறுதியோடும், வேகத்தோடும், விவேகத்தோடும், வீரத்தோடும் தமிழினம் இந்த சோதனைக் காலத்தைக் கூட வெற்றிகரமாகக் கடக்கும் என்பது திண்ணம்.

# சர்வதேசத்தின் பக்கச்சார்பு நிலையைக் கண்டித்து கனடாவில் திங்களன்று உரிமைக்குரல் நிகழ்வுகள்

## இரு நகரங்களில் நடத்த ஏற்பாடு

ஒட்டாவா,மே26

சர்வதேசத்தின் பக்கச்சார்பான செயற்பாட்டுக்கு கண்டனம் தெரிவித்து எதிர்வரும் திங்கட்கிழமை கனடாவின் தலைநகரான ரொறன்றோ மற்றும் ஒட்டாவா நகரங்களில் உரிமைக்குரல் எழுப்பும் நிகழ்வுகள் நடத்த ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு இந்த உரிமைக்குரல் நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் வருமாறு:

✱ தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதியான தமிழீழ விடுதலைப்புலிகளை கனடா அரசு தடைசெய்தமை காரணமாக உந்தப்பட்ட இன வெறியர்களான ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட தமிழினப் படுகொலைகளையும் ,மனித உரிமை மீறல்களையும் உடன் நிறுத்துவதற்குக் கனேடிய அரசும் சர்வதேச சமூகமும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

✱ ஈழத்தமிழரின் அடிப்படை அபிலாசைகளான தன்னாட்சியுரிமை, தாயகம்,தேசியம் என்பன ஏற்றுக்கொள்ளப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் தேசியத் தலைமை என்ற யதார்த்தம் மதிக்கப்பட வேண்டும்.

✱ கனேடிய அரசானது எவ்விதத்திலும் பொருத்தமற்ற சூழ்நிலையில் பக்கச்சார்புடன் தமிழரின் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்தமை என்பதைச் சுட்டிக்காட்டி அதனை மீளாய்வு செய்ய வேண்டும்.

✱ யுத்தநிறுத்த உடன்பாடு ஏற்படுவதற்கு ஆதாரசக்தியாக விளங்கிய ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைத் தடை செய்யும் முயற்சியான தற்போதைய பக்கச்சார்பான நிலைப்பாடு கைவிடப் படவேண் டும்.

புலம்பெயர் தமிழரோடு கனேடிய தமிழர் சமூகமும் அல்லலுறும் மக்களின் துயர் தீர்க்கவும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் தமது உணர்வுகளை சர்வதேச உலகிற்கு எடுத்துக் காட்டவும் சர்வதேசத்தின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்பவும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

# வடமராட்சியில் கிளைமோர் மீட்பு!

கரவெட்டி,மே26

வடமராட்சி, புறாப்பொறுக்கி ஆலடியில் நேற்றுக்காலை 9 மணியளவில் கிளைமோர் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை ஆயுதமீட்புத் தேடுதலில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் பருத்தித்துறை பிரதான வீதி புறாப் பொறுக்கி ஆலடியிலுள்ள பற்றை மறைவு ஒன்றிலிருந்து இந்தக் கிளைமோரை மீட்டுள்ளனர்.

இதேவேளை, அந்தப் பகுதியில் காணப்பட்ட இரண்டு இளைஞர்களை இராணுவத்தினர் கைதுசெய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளைமோர் மீட்கப்பட்டதை அடுத்து காலை 9 மணி தொடக்கம் நண் பகல் 12 மணி வரை இவ்வீதியூடாக போக்குவரத்துகள் யாவும் தடை செய்யப்பட்டிருந்தன. 12 மணிக்குப் பின்னர் போக்குவரத்துகள் யாவும் வழமைக்குத் திரும்பின என்று அறியப்பட்டது.

(70)

# பாஷையூர் மீனவர் சங்கத்துக்கு தளபாடங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,மே26

ஆஸ்திரேலியா அரசின் நிதியுதவியுடன் இடம்பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பு (ஐ.ஓ.எம்.) பாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் சங்கத்திற்கு ஒரு தொகுதி தளபாடங்களை வழங்கியுள்ளது.

இந்தத் தளபாடங்கள் கையளிப்பு நிகழ்வு கடந்த 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் சங்கப் பணிமனையில் நடைபெற்றது.

இதன்போது உருக்கு அலுமாரி ஒன்று, மாநாட்டு மேசை ஒன்று, பிளாஸ்ரிக் கதிரை பத்து, கணனி மேசை ஒன்று என்பன வழங்கப்பட்டன.

மேற்படி நிறுவனத்தின் திட்ட உத்தியோகத்தர் அ.அ.உதயகுமார், உதவித் திட்ட உத்தியோகத்தர் வி.வரதபரன் ஆகியோர் இந்தத் தளபாடங்களைக் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தை அருட்திரு இ.ஸ்ரலின், சட்டத்தரணி அன்ரனிப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(190)

## தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில்

# ஓய்வூதிய அதிகரிப்புக் கொடுப்பனவை ஜூன் மாதம் முதல் வழங்க நடவடிக்கை

தென்மராட்சி,மே26

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறுவோருக்கு ஜூன் மாதம் முதல் ஓய்வூதிய அதிகரிப்புக் கொடுப்பனவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த 1997 ஜனவரி இரண்டாம் திகதிக்கு (02.01.1997) முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கே இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இக்கொடுப்பனவுகள் அதிபர்கள், ஆசியர்களுக்கு வழங்குவது தொடர்பான விவரங்கள் சுற்றறக்கையில் (02/2006) குறிப்பிடாததால் இக்காலப் பகுதியில் ஓய்வுபெற்ற அதிபர்கள் ஆசிரியர்களுக்கு ஓய்வூதிய அதிகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாண்டு ஜனவரி தொடக்கம் ஓய்வூதியம் அதிகரிக்கப்படுகின்றபோதிலும் அதிகரிக்கும் ஓய்வூதியத்தின் 50 வீதம் 2006 ஜனவரி மாதம் தொடக்கமும் மிகுதி 2007 ஜனவரி தொடக்கமும் வழங்கப்படுமென சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(117)

# தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு புதிய உதவிப் பிரதேச செயலர், கணக்காளர்

தென்மராட்சி,மே26

தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்குப் புதிய உதவிப் பிரதேச செயலர், கணக்காளர் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய திருமதி ஏ.சாந்தசீலன், தென்மராட்சி உதவிப் பிரதேச செயலாளராகவும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பிரதம கணக்காளராகக் கடமையாற்றிய இ.பத்மநாதன் தென்மராட்சிப் பிரதேச செயலகக் கணக்காளராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய ஏ.பரந்தாமன் யாழ். செயலக தலைமைப்பீட உதவி அரச அதிபராகவும் கணக்காளராகக் கடமையாற்றிய ஜீ.கில்பேட் குணம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கும் இடமாற்றலாகிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

(117)





## நாளை

வைகாசி 13

சனிக்கிழமை

27.05.2006

திதி : அமாவாசை

முற்பகல் : 11.22

நட்சத்திரம் : கார்த்திகை

முற்பகல் : 08.03

சுபநேரம் : 02.52 - 04.22

[illegible] : 08.52 - 10.22

# அல்லைப்பிட்டி அகதிகளுக்கு புனர்வாழ்வுக்கழகம் உதவி

அல்லைப்பிட்டியில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் அடைக்கல அன்னை ஆலயத்தில் தஞ்சமடைந்துள்ள 95 குடும்பங்களுக்கு யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் உடுபுடைவைகள், சவர்க்காரம், பால்மா போன்ற பொருள்கள் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர், பணியாளர்கள், அல்லைப்பிட்டி கிராம சேவகர், பங்குத் தந்தை ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நாவாந்துறை சென்.நீக்கிலஸ் தேவாலயத்தில் தங்கியுள்ள 41 குடும்பத்திற்கும் நிவாரணம் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உதயவாக்கு

வாழ்வில் நமக்குச் சொந்தம் என்று [illegible]கூடிய சொத்து நம் செயல் [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி இடம்பெயர்ந்து அல்லலுற்ற வேளையில், பலத்த தடைகள், எதிர்ப்புக்கள் மத்தியிலும் எமக்கு ஆதரவளித்து தமது பாடசாலை வளாகத்துள் புகலிடமளித்த யா/இராமநாதன் கல்லூரியின் முன்னாள் அதிபர்

**அமரர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

(50529)(26.17.15)

## அறிவித்தல்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், மானிப்பாய் கோயிற்பற்று, நவாலி இறை தெங்கன் தோட்டம் என்னும் ஆதனத்தில் நிலப்பரப்பு 8 குளி 5 கொண்ட ஆதனத்தில் நவாலி வடக்கைச் சேர்ந்த பொன்னம்பலம் இராசதுரை ஆகிய எனக்கு நிலப்பரப்பு 3 குளி 6 உம் எனது பெறாமகனான நவரத்தினம் பாலமுரளிக்கு நிலப்பரப்பு 2 உம் சொந்தமும் ஆட்சியிலும் உரித்துடையதாக இருக்கின்றது என்றும் பிரசித்த நொத்தாரிஸ் வேலுப்பிள்ளை பொன்னம்பலம் முகராவில் நிறைவேற்றப்பட்ட 355ஆம், 356ஆம் இலக்க உறுதி மூலம் எமக்கு ஆட்சியிலும் உரித்துடையதாகவும் என்றும் எம்வசமே ஆட்சியில் இருந்து வருகின்றது என்றும் இவ்வாதனம் எமக்குரித்தான சட்டரீதியான ஆதனம் என்றும் எதுவித பிரச்சினையும் அற்ற ஆதன உரித்துக் கொண்டவர்கள் எனவும் வெளிப்படுத்துகிறோம்.

*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.*

பொன்னம்பலம் இராசதுரை,
நவரத்தினம் பாலமுரளி,
பொ.இராசதுரை, ந.பாலமுரளி.

(50508)(32.26.17.15)

## சைவசமய அறிவுப்போட்டி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், மே26

சரசாலை இந்து மன்றத்தினால் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவிருந்த சைவசமய அறிவு நாவன்மைப் போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என மன்றச் செயலாளர் க.சிவசங்கரநாதன் தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்ப திகதி எதிர்வரும் 10 ஆம்திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணம் பனை, தென்னை வள.அபி.கூட்டுறவு ஊழியர் நலன்புரிச்சங்கம்**

**எமது சங்கத்தால் நடத்த விருந்த நண்பர்களுக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் அறியத் தருகின்றேன்.**

330.கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

கூட்.சேவையிலுள்ள
அ.தனபாலசிங்கம்,
(தலைவர்).

(50538)(26.17.15)

## கேள்வி அறிவித்தல்

### காலநீடிப்பு

உதயன் பத்திரிகையில் 20-04-2006, 27.04.2006 ஆகிய திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் தொடர்பானது:

நல்லூர் பிரதேச செயலகம், காரைநகர் பிரதேச செயலகம் நிர்மாணித்தல் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் திகதி 07.06.2006 பிற்பகல் 3 மணிவரை நீடிக்கப்படுகிறது.

மூடிய கேள்விகளை *தலைவர், மாவட்ட கேள்விச்சபை, கச்சேரி, யாழ்ப்பாணம்* என்னும் முகவரிக்கு 14.06.2006 பிற்பகல் 3 மணிக்கு முன்பாக அனுப்பி வைப்பதுடன் உடனடியாக கேள்வி திறக்கப்படும். இந்நேரம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமுகமளிக்க முடியும்.

இது தொடர்பாக மேலதிக விவரங்களை *பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), கடற்கரைவீதி, யாழ்ப்பாணத்தில்* பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.021-222 2632).

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம் [மா]
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

க.கணேஷ்,
தலைவர்,
மாவட்ட கேள்விச்சபை/
அரசாங்க அதிபர்,யாழ்ப்பாணம்.

(சி/49404)(26.17.15)

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09 - 06 - 1934 மறைவு 26 - 05 - 1994

திருமதி

**திரவியம் திருநாவுக்கரசு**

அன்பு முகம் மறைந்து பன்னீராண்டுகள் ஆனதுவோ!
உங்கள் ஆத்மா சாந்தியடைய வெல்வில் முருகனை வேண்டுகின்றோம்.

முருகமூர்த்தி வீதி,
சங்கானை.

பாசமிகு கணவர்,மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(50526)(26.17.15)

## 31நாள் நினைவஞ்சலி

மலர்வு 23 - 05 - 1988



உதிர்வு 26 - 04 - 2006

**அமரர் ஜெயராசா மோகனதாஸ் (மோகன்)**

ஒன்றாய்க் கூடியிருந்து அன்பாய் வாழ்ந்திருக்க
பார்த்திருக்க முடியாமல் காலன் உனை கவர்ந்தானோ?
மீண்டும் நீ வருவாயென இன்றுவரை எண்ணியே
வாழ்கின்றோம் வந்துவிடடா.

இன்று (26-05-2006) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கவும்.

*சொந்த முகவரி:*
சரசாலை வடக்கு, சாவகச்சேரி,
*தற்காலிக முகவரி:*
மானிப்பாய் வீதி, உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

தாய், தந்தை, சகோதரர், பேரர், பேர்த்தி,
மாமன்மார், அத்தைமார், சித்தப்பாமார்,
சித்திமார், மச்சாள்மார், மச்சான்மார்,
சகோதரர்கள்.
தொ.பே.0776543920

(50247)(26.17.15)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 15 - 10 - 1910



மறைவு 29 - 04 - 2006

**அமரர் கணபதிப்பிள்ளை தருமலிங்கம்**

அன்னார் நோய்வாய்ப்பட்டிருந்த போது பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் மறைவுச் செய்திகேட்டு எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை (27-05-2006) சனிக்கிழமை நயினாதீவு கங்காதரணி தீர்த்தக்கரையில் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியையிலும், 29-05-2006 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் வீட்டுக்கிருத்தியத்திலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*5 ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(50505)(26.17.15)

## Save the Children in Sri Lanka

Restoration of livelihoods to families is a key protection factor for all children affected by the Tsunami. In the aftermath of Tsunami, Save the Children in Sri Lanka engaged into a series of projects through partner organisations and direct implementation aiming to restore community and household economies by replacing productive assets and providing financial support.

We are looking for a committed, energetic and dynamic individual to join our team as a:

**PARTNERSHIP DEVELOPMENT MANAGER – LIVELIHOODS**
**Base Station: Jaffna**

The Partnership Development Manager - Livelihoods is responsible for the development, implementation and monitoring of livelihood programmes to achieve SCiSL's objectives, by working closely with communities and local government authorities in the Jaffna district. The incumbent of this position is also expected to provide support to Partner organisations in the development of proposals, budgets and operational plans.
**Only Sri Lankan citizens are eligible to apply for this position.**

**Qualifications & Experience**

**Essential**

1. Graduate degree [preferably Post-Graduate] in Social Sciences or equivalent and/or 5 years work experience, preferably in the area of livelihoods.
2. Demonstrated experience in direct implementation, developing and managing partnerships with INGOs/NGOs and working with communities, particularly with children.
3. Skills related to participatory research methods (PRA, PLA, RRA), computer literacy in Microsoft Word and Microsoft Excel, financial management and report writing.
4. Experience in project planning, implementation, monitoring and evaluation.
5. Good interpersonal and liaison skills with an excellent command of written and spoken English with fluency in Sinhala/Tamil.
6. Ability and willingness to travel to all parts of the country.

**Desirable**

1. Experience of working with children and understanding of Child Rights and Child Rights-based approaches to programming.

**The above position would be initially for a period of one year.**

Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.

Please note that all positions are subject to transfer and that the age limit at SCiSL is 60 years.

Applications together with an approx. 300 word essay on how your previous work experience will assist in fulfilling the requirements of the above post, should be submitted to:

**Save the Children in Sri Lanka**
**Human Resources Unit**
**58A, Horton Place, Colombo 7**

**Closing Date: 02nd June 2006**

Only applicants selected for the interview will be contacted.
No telephone enquiries please

Save the Children in Sri Lanka [SCiSL] is part of the world's largest independent movement for children working in over 100 countries. SCiSL is a non religious, non political, independent international organization working for the protection and the full realization of child rights. Our work in Sri Lanka focuses on **Education, Children Affected by Armed Conflict/Disaster and Social Harmony and Peace.** Our projects, both self implemented and in partnership with local organizations are carried out in over 18 locations throughout the country.

**Protecting Rights - Promoting Responsibilities**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 30 - 06 - 1989



ஆண்டவன் அடியில் 26 - 05 - 2005

### செல்வி மேரி தியோஜினி சூசைதாஸ்

பேர் சொல்லி அழைக்கப் பெண் மகவு இல்லையெனப்
பேதலித்து நின்ற எம்மைப்
பேருவகை கொள்ளச் செய்து பெருமகனார் எமக்களித்த
பேரன்பே பெருமை சேர் பொக்கிஷமே.

நேசமிகு புத்திரியாய் பாசமிகு சோதரியாய்
ஆசையுடன் நாம் வளர்த்த அருங்கலைச் செல்வமே!
நிசரெமைத் தவிக்கவிட்டு நிலையான வாழ்வு தேடி
நேசமிகு யேசுபிரான் திருவடி நீ சென்றனையோ?

ஈரெட்டு ஆண்டுகளாய் எம்மோடு கூடி நின்று
கவிபெற்ற மதியினளாய் பேர் பெற்ற மாணவியாய்
சீர் பலவும் பெற்றுயர்ந்த செம்மனச் செல்வியாய்
பார் போற்ற வாழ்ந்து வந்த பைங்கிளியே பறந்தனையோ?

இறைவனடி சேர்ந்தார்க்கு இறப்பில்லையாதலினால்
மறைமுதல்வன் மலர்ப்பாதம் சேர்ந்தாய் - உந்தன்
குறைவாழ்வில் குவலயத்தில் நேசித்த நாமுனது
நிறைவாழ்விலும் ஒருபோதும் உனை மறவோம்.

சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு.
(50471)(32.26.16)

என்றும் நெஞ்சில் நிறைந்திருக்கும்:
அன்பு நிறை பெற்றோர், சகோதரர்.

---

### மாணவர் கவனத்திற்கு

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தில் 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட வகுப்புகள் எதிர்வரும் 29ஆம் திகதி காலை 8.30 தொடக்கம் நடைபெறவுள்ளன. சகல மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு வித்தியாலய அதிபர் கேட்டுள்ளார்.

---

**Jaffna Study Center of**
**Colombo Theological Seminary**
**கொழும்பு இறையியல் கல்லூரி,**
**யாழ்.நிலையம்**

எதிர்வரும் 29 மே-2 ஜூன் வரை நடைபெற இருந்த கிறிஸ்தவ கல்வி பாடமானது தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என அறியத்தருகிறோம். அப் பாடம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

நீங்கள் யாருக்காவது இப்பாடத்தைக் குறித்து தெரிவித்திருப்பின் அவர்களுக்கும் இதை அறிவிக்கவும்.

(50516)(26.16) நிர்வாகம்.

---

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



13-04-2006 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது அன்பு மகன்

### அமரர்
### பஞ்சாட்சரம் கிருபாகரன்

அவர்களின்
வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் 27-05-2006 சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*(தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)*

"குரு பவனம்",
கண்டி வீதி,
சாவகச்சேரி.

(C/49394)(26.16) -குடும்பத்தினர்.

---

UNOPS United Nations Office for Project Services

Sri Lanka Project Implemention Facility
17/17A Park Avenue, Colombo 5, Sri Lanka

# EXPRESSION OF INTEREST

The Sri Lanka Project Implementation Facility of the United Nations Office for Project Services seeks expressions of interest for the provision of individual consulting and contract services in the following subject areas:

1. **Site Engineer** – Killinochchi , Mullaitivu, Jaffna

◆ **Duties & Responsibilities**

- Field survey. This activity consists of organizing and undertaking a survey team to determine the topography of a project site and, if necessary, collecting technical data/samples on soil, local materials, water quantity, water samples, flood marks. This activity includes the construction of permanent and semi-permanent bench marks.
- Topographic maps. This activity consists of plotting the field survey with the required contour lines and profiles of specific alignments including relevant field data such as flood marks and location of trees/buildings/properties.
- Drafting. If the work load allows, the Junior Engineer will assist in drafting projects that have been designed.
- Quantity Estimates. This activity consists of preparing the Bill of Quantity for each designed projects and corresponding cost estimates based on current market prices. This activity also requires the establishment of a data base on market prices of construction materials, labour cost, equipment rentals, equipment purchases, hand tools, etc. in each provinces.
- Construction supervision of buildings:
  - Checking and certifying and conducting appropriate quality control tests of Form work, Reinforcement, Concreting and other works.
  - Ensure quality of materials being used meet the relevant specifications. http://www.unops.org tel+94 112 580962 + 94 773 158845
  - Supervision of finishing works such as plastering, painting etc.
  - Taking joint measurement of work done with the contractors representative at periodic intervals.
  - Keeping site records relating to Materials , labour and plants and equipment at site.
  - Overall quality control
  - Ensure safety at site.

◆ **Qualifications:**

- Bachelor of Science in Civil Engineering.
- A minimum 2 years relevant construction experience or NDT/ NCE with 10 years relevant experience.
- Use of computer with word/excel software is required. Good understanding of written and oral English is essential.

2. **Technical Officer** – Killinochchi , Mullaitivu , Jaffna

◆ **Duties & Responsibilities:**

- Field survey. This activity consists of organizing and undertaking a survey team to determine the topography of a project site and, if necessary, collecting technical data/samples on soil, local materials, water quantity, water samples, flood marks. This activity includes the construction of permanent and semi-permanent bench marks.
- Topographic maps. This activity consists of plotting the field survey with the required contour lines and profiles of specific alignments including relevant field data such as flood marks and location of trees/buildings/properties.
- Drafting. If the work load allows, the Technical Officer will assist in drafting projects that have been designed.
- Quantity Estimates. This activity consists of preparing the Bill of Quantity for each designed projects and corresponding cost estimates based on current market prices. This activity also requires the establishment of a data base on market prices of construction materials, labour cost, equipment rentals, equipment purchases, hand tools, etc. in each province.
- Construction supervision of buildings:
  - Checking and certifying and conducting appropriate quality control tests for Form work, Reinforcement, Concreting and other works.
  - Ensure quality of materials being used to meet the relevant specifications.
  - Supervision of finishing works such as plastering, painting etc.
  - Taking joint measurement of work done with the contractor's representative at periodic intervals.
  - Keeping site records relating to materials, labour and plants and equipment at site.
  - Overall quality control
  - Ensure safety at site.

◆ **Qualifications:**

- NDT/ NCE
- 5-10 years relevant experience.
- Use of computer with word/excel software is required.
- Good understanding of written and oral English is essential.

3. **Liaison officer – Jaffna**

◆ **Duties & Responsibilities:**

- Liaison with local communities, Agencies, partners and government departments.
- Administration of projects and non technical aspects including approvals, licenses, correspondence, etc.
- Reporting. Will be responsible for preparation of reports.
- Documentation. Preparation, Maintenance and filing of project documents, licenses, reports etc.

◆ **Qualifications:**

- Candidates should have a minimum of 10 years experience in the field of administration/ liaison
- Completion of secondary education.
- Use of computer with word/ excel software is required.
- Should possess a valid Sri Lankan driving license for Motor cycle and car.
- Understanding of spoken Tamil/ Sinhala & English and written Tamil and English is essential.
- Background in construction is beneficial, but not required.
- Knowledge of UN and Government rules and regulations will be considered an asset.
- The candidate should demonstrate flexibility in undertaking any type of work assigned to him.

The UNOPS-SLPIF has a diverse portfolio of challenging Engineering projects which will afford incumbents, opportunities to gain a range of experience in various Engineering fields, an opportunity to join a growing young dynamic organization providing technical reconstruction services and offering professional development opportunities.

*Candidates with private sector background are strongly encouraged to apply.* Race, ethnicity or religion will not be a deciding factor in considering applications from qualified candidates.

**Applications close on 3 June 2006.**
Interested and qualified candidates are invited to submit a concise CV to the relevant field offices.

Field Coordinator
UNOPS,
123, Temple road,
Jaffna.

Field Coordinator
UNOPS,
230, Thirunagar,
Kilinochi.
kiliadmin@unops.org.lk

(C/49398)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவலைகள்

மலர்வு 19 07 1952



உதிர்வு 06 06 2005

## அமரர் முத்து கதிரமலை

(செல்லக்கிளி)

(கிருபா கிறேசர் உரிமையாளர், வல்வை - அச்சுவேலி)

திதி :- அமாவாசை (26.05.2006)

எம் குடும்பத்தின் ஒளி விளக்கே!
அன்போடு எம் அருகிருந்து
பண்பாக எமை வளர்த்தீர்கள்
ஊர் போற்ற நாம் வாழ
உவகை கொண்டீர்கள்
வழிகாட்டல் போதுமென்றோ
வானுலகம் சென்றீர்கள்
எமை தோளிலும் மார்பிலும் தூக்கி
பாசத்தைக் காட்டி அன்புடன் அரவணைத்த அப்பாவே!
நாம் சீரோடும் சிறப்போடும் வாழ்வதை
கண்டு கழிக்க காலனவன் மறுத்து விட்டான்

கடமை எல்லாம் முடிந்ததென்றோ
காலன் உம்மை கவர்ந்தெடுத்து எமை
கண்ணீரில் மூழ்கவிட்டான்
நிலையில்லா வாழ்வினிலே நீங்காத நினைவுகளைத்
தந்து விட்டு நிலையான வாழ்வு தேடி சென்ற
தெய்வமே!
நாம் என்றும் உங்களை நினைத்திருக்க
நீங்கள் மட்டும் எமை விட்டுப் பிரிந்ததேனோ?
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவெல்லாம் எம்
நெஞ்சை விட்டு நீங்காது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(50532)(23-11-14)

உம்பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச படைகளால் தமிழ் மக்கள் படுகொலை அரசே அதற்குப் பின்னணி; முழுப் பொறுப்பு!

## காட்டமாகக் குற்றம் சாட்டுகிறார் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன்

கொழும்பு,மே26

இலங்கை அரசு தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தவறிவிட்டது. தமிழ் மக்கள் அரச படையினரால் தொடர்ந்தும் கொலை செய்யப்பட்டு வருகின்றபோதும், அதைத்தடுக்காது - சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்யாது - அக்கொலை நடவடிக்கைகளை அரசு ஊக்குவித்த வண்ணமே உள்ளது."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் குற்றம் சுமத்தினார். இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் இன்று வெள்ளிக்கிழமை விசேட விவாதம் ஒன்று நடைபெறவுள்ளதாகக் குறிப்பிட்ட அவர் - இந்தவிடயம் சர்வதேச நாடுகளின் கவனத்திற்கு - குறிப்பாக இந்தியாவின் கவனத்திற்கு - கொண்டு செல்லப்படும் என்றும் கூறினார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கில் அரச படையினர் தமிழ் மக்கள் மீது அடாவடித்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர். தினமும் தமிழ் மக்கள் கொலைசெய்யப்படுகின்றனர், கடத்தப்படுகின்றனர், காணாமல்போகின்றனர், கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்படுகின்றனர், பின்னர் அவர்கள் கொலைசெய்யப்படுகின்றனர்.

இந்த நடவடிக்கையைத் தடுக்காது அரசு அதை ஊக்குவித்துக்கொண்டிருப்பதால் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் வாழமுடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் இந்தியாவுக்குப் புலம் பெயர்கின்றனர்.

வடக்கு - கிழக்கில் தமிழர்கள் எதுவித காரணமுமின்றி - வகைதொகையின்றி - கொலை செய்யப்படுகின்றனர். எல்லாவற்றையும் செய்பவர்கள் அரச படையினர்தான் என்பது உறுதி.

குறிப்பாகக் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 16ஆம் திகதி யாழ். புங்குடுதீவில் தர்சினி என்ற யுவதி படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

அவர் கொலைசெய்யப்பட்டு பாழடைந்த கிணறு ஒன்றிற்குள் சடலமாகப் போடப்பட்டிருந்தார். அந்த இடத்தில் படையினரின் சப்பாத்துக்களின் அடையாளங்கள் காணப்பட்டன.

இதனையடுத்து இது தொடர்பாக யாழ். யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு செய்யச் சென்ற பல்கலைக்கழக மாணவர்கள் படையினரால் தாக்கப்பட்டனர்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி எமது நாடாளுமன்ற உறுப்பினர் ஜோஸப் பரராஜசிங்கம் மட்டக்களப்பில் கிறிஸ்தவ தேவாலயத்தில் வைத்து கிறிஸ்மஸ் வணக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதனையடுத்து திருமலையில் 05 தமிழ் மாணவர்கள் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். அம்மாணவர்கள் வைத்திருந்த குண்டு வெடித்துத்தான் அவர்கள் மரணித்தனர் எனப் படையினர் வியாக்கியானம் கூறினர். ஆனால், அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமை வைத்திய பரிசோதனையில் இருந்து தெரியவந்துள்ளது.

அதன் பிறகு திருகோணமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வி.விக்னேஸ்வரன் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து ஏப்ரல் மாதம் எட்டாம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

அரச வங்கியில் ஊழியராக இருந்த விக்னேஸ்வரன் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள படையினரின் இரண்டு சோதனைச் சாவடிகளுக்கிடையில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதன் பிறகு திருகோணமலைச் சந்தையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பையடுத்து அரச படையினரின் ஒத்துழைப்புடன் பட்டப்பகலில் திருமலை நகரில் தமிழர்கள் மீது சிங்களவர் தாக்குதல் நடத்தினர், கொலை செய்தனர்; தமிழர்களின் கடைகளுக்குத் தீ வைத்தனர்.



இராணுவத் தளபதி சரத்பொன் சேகா மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக திருமலை சம்பூர் பகுதியில் பொது மக்களின் வாழ்விடங்களின் மீது வான் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் தமிழர்கள் மாத்திரமன்றி முஸ்லிம்களும் கொல்லப்பட்டனர்; காய மடைந்தனர்.

இம்மாதம் இரண்டாம் திகதி யாழ். 'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் உதயன் ஊழியர்கள் இருவர் கொல்லப்பட்டனர்; பொருள்களும் சேதமாக்கப்பட்டன.

இம்மாதம் 13ஆம் திகதி யாழ். அல்லைப்பிட்டியில் 13 தமிழர்கள் கொல்லப்பட்டனர்; 04 மாதக் குழந்தையும் அதில் அடங்கியிருந்தது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவ முன்வந்த மூன்று அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு இன்னும் எத்தனையோ சம்பவங்கள் இடம்பெற்றுவிட்டன. இவை அத்தனைக்கும் காரணம் அரச படையினர்தான்.

இவை அனைத்தையும் நாம் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்தோம். நாடாளுமன்றத்திலும் இந்நடவடிக்கைகளை எதிர்த்து - சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யக்கோரி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டோம்.

தமிழர்கள் மீதான வன்முறைகள் நிறுத்தப்படும், அதற்குக் காரணமானவர்கள் கைது செய்யப்படுவார்கள் என அரசு பல தடவைகள் வாக்குறுதியளித்துள்ளதே தவிர ஒருவரையேனும் இதுவரைக் கைது செய்யவில்லை.

மாறாகத் தொடர்ந்தும் தமிழர்கள் மீது அடாவடித்தனங்கள் தொடர அரசு பின்னணியில் நிற்கிறது. இதனால் தமிழர்கள் அரசின் மீது நம்பிக்கை இழந்துள்ளனர். இந்த அரசு தம்மைப் பாதுகாக்காது என்று அறிந்ததன் காரணமாகவே தமிழர்கள் இந்தியாவை நோக்கிப் புலம்பெயரத் தொடங்கிவிட்டனர்.

ஆகவே, இந்த விடயம் குறித்து நாம் இன்று நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளோம். கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்த் விவாதம் குறித்துத் தீர்மானிக்கப்பட்டது - என்றார் அவர். (க)

# தமிழ் மக்கள் மீதான கொலைவெறியை அரசு இத்துடன் நிறுத்துமா? இனிமேலும் தொடருமா?

## நாடாளுமன்றில் மகேஸ்வரன் ஆவேசம்!



''தமிழர்கள் மீது அரசு மேற்கொண்டு வரும் கொலை வெறியாட்டத்தை அரசு இத்தோடு நிறுத்திவிடுமா அல்லது முடிவில்லாமல் தொடர்ந்து நடத்திக்கொண்டே இருக்குமா?''

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற இரட்டை வரி விதிப்பைத் தடுத்தல் தொடர்பான சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது ஆவேசத்துடன் கேள்வி எழுப்பினார். அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் அரச படையினரால் கொலைசெய்யப்பட்டுக் கொண்டு வருகின்றனர். இதைத் தடுத்து நிறுத்துமாறு நாம் அரசிடம் கோரிவருகின்ற போதும் அரசு அதைக் கவனத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை.

காரணங்கள் எவையுமில்லாமல் தமிழர்கள் தொடர்ந்தும் கொல்லப்பட்டுவருவது அரசின் முழு ஆதரவுடன்தான். நீதி மரணித்துவிட்டது. கொடுங்கோல் ஆட்சிதான் நடைபெறுகிறது.

அடுத்து என்ன நடக்கும் என்று தெரியாமல் மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர். அரசு ஒருபோதும் தம்மைப் பாதுகாக்காது தம்மை முற்றாக அழித்தொழிக்கவே திட்டமிடுகிறது என்பதை அறிந்த மக்கள் தமிழ் நாடு நோக்கி இடம்பெயர்கின்றனர்.

- அவ்வாறு கடல்வழியாக இடம்பெயர்கின்ற மக்கள் கடலில்மூழ்கிப் பரிதாபகரமாக உயிரிழக்கும் சம்பவமும் நடக்கத்தான் செய்கிறது.

அதுபோல் இவ்வாரம் தமிழ் நாடு செல்வதற்காகக் கடல்வழியாகப் பிரயாணம் செய்த தமிழ் மக்கள் 20 பேர் நடுக்கடலில் தத்தளித்தவேளையில் நீர்கொழும்புக் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த சிங்கள மீனவர்கள் அவர்களைக் காப்பாற்றிவந்து நீர்கொழும்பு பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

அவர்கள் சிலாபம் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு நீதிபதியின் உத்தரவின் பேரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் இவர்கள் குற்றவாளிகளாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அந்த 20 தமிழர்களுக்கும் சரியாக உணவு வழங்கப்படவில்லை. மாற்றிக்கொள்ள ஆடைகள் வழங்கப்படவில்லை.

- இவ்வாறு பேரினவாதிகள் எல்லோரும் சேர்ந்து தமிழ் மக்களை அடக்கியாள முற்படுகின்றனர். தமிழர்கள்மீது யுத்தத்தைத் திணித்து அதன்மூலம் தமது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ளவே இந்த அரசு முயற்சி செய்கிறது.

அரசு இந்தக் கொடூர நடவடிக்கையை நிறுத்தி தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். தமிழர்கள்மீது வன்முறைகள் மேற்கொள்பவர்களைக் கைது செய்து சட்டத்தின்முன் நிறுத்தவேண்டும் - என்றார். (க)

# 10 மாதங்களுக்கு முன்னர் கைதான இளைஞரை விடுவிக்கக்கோரி மனு!

கொழும்பு,மே26

கொழும்பு, பௌத்தலோக மாவத்தையில் வைத்து பத்துமாதங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டு தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மலையக இளைஞர் ஒருவரை நீதிமன்றில் ஆஜர்செய்து விடுவிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் ராஜா பெர்னாண்டோ, நிஹால் காமினி அமரதுங்க ஆகியோர் முன்னிலையில் இந்த அடிப்படை உரிமை மீறல் மனு கடந்த திங்களன்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது அதனை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதியரசர்கள், எதிர்மனுதாரர்களுக்கு எதிர்வரும் ஒகஸ்ட் 25ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக நோட்டீஸ் பிறப்பிக்குமாறு உத்தரவிட்டனர்.

கொழும்பு, பௌத்தலோக மாவத்தையில் உள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவு முகாமைச் சேர்ந்த சார்ஜண்ட் உபாலி ரணதுங்க, இராணுவத் தளபதி, கொழும்பு கறுவாத் தோட்ட பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலீஸ்மா அதிபர், களுத்துறை சிறைச்சாலை அத்தியட்சகர், சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவையைச் சேர்ந்த மனுதாரர் 32 வயது இளைஞர் என்றும் -

மலையகத்தில் பணிபுரிந்துவந்த இவர், பின்னர் கொழும்பில் கட்டடம் ஒன்றை உடைக்கும் வேலையில் நாளாந்தக் கூலியாக இணைந்து பணிபுரிந்த சமயத்தில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு, பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு அதன் பின் நீதிமன்றினால் பத்து மாதங்களுக்குமேல் தொடர்ந்து விளக்க மறியலில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார் என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றில் சட்டத்தரணி இ.மதியாம் பிள்ளையின் அ[illegible] சட்டத்தரணி பி. எஸ். கணேசலிங்கம் மனுதாரர் சார்பில் ஆஜரானார். (க)

# இலங்கை அரசை எச்சரிக்கும் தீர்மானத்தை தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றுங்கள்

## 'விடுதலைச் சிறுத்தைகள்' அமைப்பு கோரிக்கை

கொழும்பு,மே26

தமிழீழத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது இலங்கை இராணுவம் தாக்குதல்கள் நடத்துவதைத் தடுக்கவும் அங்கு அமுலில் இருக்கும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறி செயற்படும் இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையிலும் தமிழக அரசு, சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றவேண்டும்.

- இவ்வாறு தமிழக அரசை விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

சென்னையில் தொல். திருமாவளவன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் நிர்வாகக் குழுக்கூட்டத்தின்போதே [illegible] அரசை வலியுறுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழீழ மக்கள் மீது திணிக்கப்படும் போர்ச் சூழலைத் தடுத்து நிறுத்திட தமிழ் மக்களுக்கு ஆதரவாக இந்திய அரசு இனப் பிரச்சினையில் தலையிடவேண்டும். எந்தவொரு சூழலிலும் இந்தியப் பேரரசு சிங்களப்பேரினவாத அரசுக்கு துணைபோகக் கூடாது. அதற்கான தடுப்பு நடவடிக்கைகளைத் தமிழக அரசு மேற்கொள்ளவேண்டும்.

தமிழீழ மக்களின் விடுதலைக்காகப் போராடிவரும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான வகையில் தொடர்ந்தும் சதிசெய்து வருகின்ற அமெரிக்க வல்லரசின் தமிழின விரோதப் போக்கை விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது.

- இவ்வாறும் நிர்வாகக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகத் தமிழகச் செய்திகள் தெரிவித்தன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம், புங்கங்குளம்

# வில்வையடி ஸ்ரீநாகபூஷணி அம்பாள்



# ஆலய வருடாந்தப் பொங்கல் விழாச் சிறப்பிதழ்

## 26.05.2006

# வில்வையம்பதியில் வீற்றிருந்தே வினை தீர்க்கும் அன்னை

### அம்பாளின் அருட்பார்வை

யாழ்.குடாநாட்டில் புங்கங்குளப் பகுதியில் தோன்றி அருள் பாலிக்கும் அம்மன், நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மனின் அருள் ஆட்சியே ஆகும். ஆனால், இந்த புங்கங்குள அம்மனின் அருட்தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்ட தொன்றன்று. இற்றைக்கு சுமார் 40 வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட்பார்வை இவ்விடத்திலே தோன்றியிருப்பதை அடியார்கள் அறிந்து கொள்வார்கள்.

### அம்பிகையின் அருட்தோற்றம்

அழகிய பெருந்தெரு, அதனை அண்டியிருக்கும் ஒரு புனிதமான குச்சொழுங்கை, அறிவும் ஆற்றலும் தெய்வீகமும் நிரம்பியிருக்கும் மக்கள் சூழ்ந்த அயல். இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும் அற்புத மரத்தோப்புக்கள். இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்திருக்கிறது அம்மனுக்குப் பிடித்தமான ஒரு வில்வமரம். இந்த மரத்தின் அடியிலேதான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று. அக்காலத்தில் இந்த வளவுக்குள் குடியிருந்த அடியவர்கள் அம்மனின் அருளையும் அருட்தோற்றத்தையும் அற்புதங்களையும் பல தடவைகள் கண்டு வியந்து தெய்வீக மேலீட்டினால் அந்த இடத்திலே சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆராதிக்க முற்படலாயினர். காலப்போக்கிலே அயலவர்களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம்பாள் அடியார்களாயினர். யாழ். நகரிலே புங்கங்குளப் பகுதியிலே வில்வமரத்தடியிலே அம்பாளின் வதிவிடம் மிகச் சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களினால் இந்த ஆலயம் தெய்வீக நிலையினால் மிக மிக மேலோங்கியுள்ளது குறிப்பிடத்தக்க விடயம்.



வில்வை மரத்தாளை வெவ்வினைகள் களைவாளை
அல்லும் பகலுமெங்கள் தொல்லையற அருள்வாளை
பொல்லா வினையகல புங்கங்குளத்தார் புகுந்த!
கல்லும் கசிந்துருக பாவிகள் நாம் பணிந்திடுவோம்.

### அம்பிகையின் தெய்வீகப் புதுமை

இந்த ஆலயத்துக்குள் பிரவேசித்ததும் அடியார்களுக்கு ஏற்படு கின்ற உணர்ச்சிப் பரவச நிலை. அம்பாளைத் தரிசிக்க வரும்போது காணக்கூடிய அற்புதக்காட்சிகள். அம்பாளுக்கு பூசைக்காக அடியார்கள் கொண்டு வந்து வைக்கின்ற பால், பழங்கள், மலர்கள் மறைந்துவிடுகின்ற தன்மை. அடியார்களின் நடமாட்டம் இல்லாதபோது இங்கு நடக்கின்றதோர் இனந் தெரியாத தெய்வீக நடமாட்டம். அம்பாளுக்குச் செய்கின்ற நேர்த்திக்கடன்களினால் நோய், பிணி, தோசங்கள் நீங்கிவிடும் தன்மை. அத்தனைக்கும் மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர்க்கப்பட்டி ருக்கும் தீக்கு ழம்பின் மேல் அடியார்கள் ஆரவாரம் இன்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இந்த ஆலயத்திலே விரும்பி உறைகின்ற தன்மையை வெளிப்படுத்துகின்றன.

### நம்பியே கைதொழுவோம் நாம்

அம்பாளின் வருடாந்தப் பொங்கல் தினம் இன்று வெள்ளிக்கிழமை ஆகும். அடியார்கள் அனைவரும் யாழ்.நகரில் புங்கங் குளம் பகுதி வில்வையடியிலே அமர்ந்து அருள் பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருட்பெரும் தோற்றத்தை அணுகி பேரருள் பெற்று உய்வார்களாக!

'மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்'
அம்பிகையை சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாமே!
நம்பியே கைதொழுவார்க்கு பிணிநீங்கிடுமே!!

## விழா சிறப்புற வாழ்த்துவோர்:


கட்டடப் பொருள்கள், உழவு இயந்திர, லாண்ட்மாஸ்ரர் உதிரிப்பாகங்கள் விநியோகஸ்தர்கள்
**கே.வைத்திலிங்கம் கொம்பனி**
38,40,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:2075

றேடியோ, மணிக்கூடுகள், ரீ.வி.,டெக் மற்றும் மின்சாரப் பொருள்களுக்கு
**சிவாஸ் சென்ரர்**
70, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 3884

கோயிலுக்குத் தேவையான பட்டு, சரிகைத் துணிகள், பட்டுவேட்டிகள், சால்வைகள் மற்றும் நவீன சாறி வகைகள் முதலியவற்றுக்கு நாடுங்கள்
**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
54, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

நவநாகரிக நங்கையர் விரும்பும் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு உத்தரவாதம் மிக்க நம்பிக்கையான ஸ்தாபனம்
**சிறிநதியா நகைமாடம்**
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வில்வையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்
**கச்சான் பிஸ்கட்**
தயாரிப்பு:T.S.நாதன்
இல. 96/1, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2491

தரமான நல்ல பொருள்களை நீங்கள் நயமாக வாங்கிக் கொள்ள நாடுங்கள்
**புதிய முருகன் வணிக நிலையம்**
(நியூ முருகன் றேடர்ஸ்)
56 A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

எல்லா அளவுகளிலும் நல்ல தரமான மரங்களை எந்நேரமும் சகாய விலைகளில் பெற்றிட நாணயம் மிக்க நிறுவனம்
**அன்னை மரக்காலை**
உரிமையாளர்: க.முருகேந்திரன்
176, ஆரியகுளத்தடி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

அழகுக்கு அழகு கூட்டும் தங்க ஆபரணங்களுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்
**அலங்கார் நகைமாளிகை**
21/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 2920

பவுண், பொன், வெள்ளி வாங்கவும் விற்கவும் நம்பிக்கையான ஸ்தாபனம்
**தம்பிப்பிள்ளையும் மைந்தரும் நகைமாடம்**
191 (343), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

குளிர்பானம் தயாரிக்கும் தரமான பொருள்களுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம்
**ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்**
161, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 2219

தரமான குளிர்பான வகைகளுக்கும் ஐஸ்கிறீம் வகைகளுக்கும் நாடவேண்டிய இடம்
**ஐடியல் கிறீம் ஹவுஸ்**
458, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

புதுப்புது டிசைன்களில் ஒளிரும் நகைகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
**சானுகா நகைமாடம்**
200 G , கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 3700

மின் உபகரணங்கள், மின்சாரப் பொருள்கள் நியாய விலையில் பெற்றுக் கொள்ள
**அபிராமி எலக்றிக்கல்ஸ்**
62/31, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நவீன வடிவமைப்புகளில் நவநாகரிக முறையில் அழகிய தங்க நகைகளைக் குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ள
**பூரணி நகைமாடம்**
1/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 3121

அழகுக்கு மெருகூட்டும் அழகிய நகைகளுக்கு நம்பிக்கை வாய்ந்த நல்ல இடம்
**சோபனா நகைமாளிகை**
116 V,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நங்கையர் விரும்பும் நவீன டிசைன் நகைகளுக்கு நாட வேண்டிய இடம்
**சிறி அமலா நகைமாளிகை**
74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 5800

நவீன டிசைன்களிலான நாகரீகத்திற்கேற்ற தங்கப்பவுண் நகைகளை நயமாகச் செய்துகொள்ள
**சிறி மீனாட்சி ஜுவல்லர்ஸ்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நல்ல குளிர்பானங்களுக்கும் ஐஸ்கிறீம் வகைகளுக்கும் சிறந்த இடம்
**நாகவி கிறீம் ஹவுஸ்**
133/10, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

நவீன வடிவமைப்புகளில் அழகிய தங்க நகைகளைச் செய்துகொள்ள நல்ல இடம்
**சிறி வெல்கம் நகைமாளிகை**
58, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு
(சந்தன மாதா கோயில் அருகில்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்குத் தற்காப்புப் பயிற்சி

## 25 பாடசாலைகளில் நடைபெறுகின்றது

முல்லைத்தீவு,மே26

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் ஒன்பதாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் தற்காப்புப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கடந்த 17ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமான பயிற்சி நிகழ்வுகள், 5 பயிற்சிப் பாசறைகளில் நாள்தோறும் நடைபெற்று வருகின்றன.

புதுக்குடியிருப்பு, கைவேலிப் பகுதிகளில் பயிற்சி ஆசிரியர் குயிலனும் வள்ளிபுனம், தேவிபுரம் பகுதிகளில் பயிற்சி ஆசிரியர் நளினரூபனும், இரணைப்பாலை பகுதியில் பயிற்சி ஆசிரியர் சாந்தனும், மந்துவில் ஆனந்தபுரம் பகுதிகளில் பயிற்சி ஆசிரியர் ரங்கனும் பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.

நாள்தோறும் நடைபெற்று வருகின்ற பயிற்சி நிகழ்வுகளில் ஒன்பதினாயிரத்துக்கும் அதிகமான மக்கள் திரண்டு பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர்.

கடந்த 22ஆம் திகதி காலை நடைபெற்ற நிகழ்வுகளில் மந்துவில் அரசரத்தினம் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, வள்ளிபுனம் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் விடுதலைப் புலிகள் பத்திரிகையின் ஆசிரியர் ரவி, தேவிபுரம் பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் சமதான செயலகப் பணிப்பாளர் சி.புலித்தேவன் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.



# மக்கள் பங்களிப்புடன் வீதி புனரமைப்பு

வட்டக்கச்சி, மே26

வட்டக்கச்சி, கட்சன் வீதியின் ஒரு பகுதி அப்பகுதி மக்களின் பங்களிப்புடன் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இரணைமடுக் குளக்கட்டு ஒற்றைக்கை பிள்ளையார் ஆலயத்திலிருந்து குடியிருப்புக்களூடாக கட்சன் வீதிச் சந்தி வரையிலான வீதியே இவ்வாறு புனரமைக்கப்படுகின்றது.

கனரக இயந்திரங்களின் உதவியுடன் வீதியின் இரு மருங்கிலும் கால்வாய்கள் அமைக்கப்பட்டு இவ்வீதி புனரமைக்கப்படுவதுடன் இவ்வீதியின் குறுக்காக நீர் பாய்ந்து செல்வதற்கான வடிகால்கள் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே வட்டக்கச்சி கட்சன் வீதிச் சந்தியில் இருந்து ஆறுமுகம் வீதி, சில்வா வீதி ஊடாக வட்டக்கச்சி சந்தையைச் சென்றடையும் வீதியும் பிரதேச மக்களது பங்களிப்புடன் புனரமைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (405)

# கரைச்சிக் கோட்டப் பாடசாலைகளின் தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

வட்டக்கச்சி,மே26

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கரைச்சிக் கோட்டப் பாடசாலை மாணவர்களிடையேயான தமிழ்த்தினப் போட்டிகளில் சிறுவர் நாடகப் போட்டியும் திறந்த போட்டிகளும் கடந்த 19ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றன.

கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி இ.அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியது. தமிழீழ தேசியக் கொடியேற்றலைத் தொடர்ந்து கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கோட்டக் கொடியினை ஏற்றிவைத்தார். மங்கள விளக்கினை கிளிநொச்சி வலயத்தின் அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி த.தட்சணாமூர்த்தி ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றன. போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

**சிறுவர் நாடகம்**

முதலாம் இடம் - கனகபுரம் ம.வி., 2ஆம் இடம் - ஐயனார்புரம் அ.த.க. பாடசாலை, 3ஆம் இடம் - கிளிநொச்சி மத்திய கல்லூரி, 4ஆம் இடம் - பாரதி வித்தியாலயம், 5ஆம் இடம் - திருவையாறு ம.வி.

**கொடிவணக்கப் பாடல்**

முதலாம் இடம் - உருத்திரபுரம் ம.வி., 2ஆம் இடம் - கிளிநொச்சி மத்திய கல்லூரி, 3ஆம் இடம் - திருவையாறு ம.வி.

**தமிழ்த்தாய் வாழ்த்து**

முதலாம் இடம் - உருத்திரபுரம் ம.வி., 2ஆம் இடம் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, 3ஆம் இடம் - திருவையாறு ம.வி.

**தமிழ்மொழி வாழ்த்து**

முதலாம் இடம் - கனகபுரம் ம.வி, 2ஆம் இடம் - உருத்திரபுரம் ம.வி., 3ஆம் இடம் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

**நாட்டுக்கூத்து (வடமோடி)**

முதலாம் இடம் - ஊற்றுப்புலம் அ.த.க.பா.

**சிந்துநடைக்கூத்து**

முதலாம் இடம் - கனகபுரம் ம.வி.(405)

# மேஜர் துளசி பயிற்சிப் பாசறையின் முதலாவது அணியின் பயிற்சி நிறைவு

கிளிநொச்சி,மே26

மேஜர் துளசி பயிற்சிப் பாசறையின் முதலாவது அணி கடந்த திங்கட்கிழமை பயிற்சியை நிறைவு செய்து வெளியேறியுள்ளது.

இந்தப் பயிற்சிப் பாசறையில் 150 பேர் இராணுவப் பயிற்சிகளைப் பெற்றுள்ளனர்.

மேஜர் துளசி பயிற்சிப் பாசறையின் முதலாவது அணியின் பயிற்சி நிறைவு நிகழ்வு பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்றது.

தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்தார்.

மேஜர் துளசியின் திருவுருவப் படத்திற்கு அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஈகச்சுடர் ஏற்றிவைத்தார்.

திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் அணிவித்தார்.

நிகழ்வின் நிறைவில் சிறப்புரை நிகழ்த்தப்பட்டது. போட்டிகளில் வெற்றிபெற்ற பயிற்சியாளர்களுக்கு சு.ப.தமிழ்ச்செல்வன், சோ.தங்கன், நா.தமிழன்பன் மற்றும் தலைமைச் செயலகப் பொறுப்பாளர் சீரன் ஆகியோர் பரிசில்களை வழங்கினர்.

# மாங்குளம் ம.வியில் முதலுதவி வகுப்புகள்

கிளிநொச்சி,மே26

தமிழீழ சுகாதார சேவையினரால் மாங்குளம் மகாவித்தியாலயத்தில் அண்மையில் முதலுதவி வகுப்புகள் நடத்தப்பட்டன.

தமிழீழ சுகாதார.சேவையின் வைத்திய கலாநிதிகள், உதவி மருத்துவர்கள் ஆகியோர் இந்த வகுப்புகளை நடத்தினர்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எனப் பெருமளவானோர் இந்த வகுப்பில் பங்குபற்றினர்.

# ஆசிரியர்களுக்கு கருத்தமர்வு

கிளிநொச்சி,மே26

கிளிநொச்சியில் முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான இருநாள் கருத்தமர்வு நடைபெற்று வருகின்றது. நேற்றுமுன்தினம் காலை 9 மணி முதல் நேற்று வரை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மாவட்டப் பணிமனையில் இவ்விருநாள் கருத்தமர்வு நடைபெற்றன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனமும் கிளிநொச்சி வலயக் கல்வி பணிமனையில் ஆரம்பக் கல்விப் பிரிவினரும் இணைந்து இக்கருத்தமர்வை ஒழுங்குசெய்துள்ளனர். எதிர்காலத்தில் சிறுவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் வகையில் முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி கற்றல், கற்பித்தல் தொடர்பாக விரிவுரையாளர்களால் இங்கு எடுத்து விளக்கப்பட்டது.

# ஒட்டுசுட்டானில் ஒருவகைக் காய்ச்சல்

ஒட்டுசுட்டான்,மே26

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சிறுவர் முதல் பெரியோர்வரை ஒருவகையான காய்ச்சலால் பீடிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மை நாள்களாக இப்பிரதேச மருத்துவமனைகளில் காய்சலுக்காகச் சிகிச்சை பெறவருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, -

சொறி,சிரங்கு போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளவர்களை வாய்க்கால் நீரில் குளிக்கவேண்டாம் என திலீபன் மருத்துவமனையினர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (341)

**வட்டக்கச்சிப் பிரதேசத்தில்**

# மின்விநியோகம் இடைநிறுத்தம்: உயர்தர மாணவர் பெரும் சிரமம்

வட்டக்கச்சி பிரதேசத்திற்கு வழங்கப்பட்டு வந்த மின்விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இப்பகுதிக்கு மின்விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதுவும் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் மாணவர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவே மின்விநியோகம் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் மின் வழங்கல் சேவையினரால் வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதிகளில் குறிப்பிட்ட சில இடங்களுக்கு நீண்டகாலமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது.

உயர்தர மாணவர்களின் நன்மைகருதி மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை உரியவர்கள் எடுக்கவேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (405)

# கால்நடை வளர்ப்பினை வலுப்படுத்த நடவடிக்கை

பரந்தன், மே26

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதேச ரீதியாகக் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் இந்த் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கால்நடை வளர்ப்போர், கால்நடைப் பண்ணையாளர்கள் ஆகியோரை கீழ்க் குறிப்பிடும் திகதிகளில் ஒன்று கூடி சங்கங்களின் நிர்வாக சபைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.

✱ ஒட்டுசுட்டான் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் - எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 10 மணி - ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையம்.

✱ துணுக்காய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் - எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 10 மணி - துணுக்காய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்.

✱ பாண்டியன்குளம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் - எதிர்வரும் 7 திகதி காலை 10 மணி - பாண்டியன் குளம் கமநலசேவை நிலையத்தில் ஒன்றுகூடல்.

✱ குமுழமுனை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் - எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 10 மணி - குமுழமுனை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம். (352)

# சுகாதார விழிப்புணர்வு கருத்தூட்டல் நிகழ்வு

கற்சிலைமடு தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தூட்டல் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

படித்துவிட்டு வீட்டில் இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு இந்த வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆர்வமுள்ளவர்கள் இந்த வகுப்புகளில் பங்குபற்றிப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சுகாதார வசதியற்ற இப்பிரதேசத்தில் மக்களுக்கான சேவையை விரிவுபடுத்தும் நோக்குடன் தியாகதீபம் மருத்துவமனையினர் இந்த வகுப்புகளை நடத்தி வருகின்றனர். (341)

# சுகாதார நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு வேண்டுகோள்

பரந்தன், மே26

தற்போதைய சூழ்நிலையில் நோய்க்காவிகள் பெருக்கமடைவதைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் விசேட சுகாதார நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், வருமுன்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொதுமக்களிடம் தமிழீழ சுகாதார சேவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தமிழீழ சுகாதார சேவையினரின் பூச்சியியல் விசேட நடவடிக்கைப் பிரிவினரால் பல்வேறு இடங்களிலும் விசேட சுகாதார நடவடிக்கைகளும், பூச்சியியல் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவற்றுக்கு ஆதரவு தெரிவித்து வர்த்தகர்கள், பொதுமக்கள் அனைவரும் தங்கள் நிலையங்கள், வீடுகளுக்கு அண்மையாக உள்ள நுளம்பு மற்றும் இலையான் உற்பத்தியாகும் இடங்களை இல்லாதொழித்து நோய்க்காவிகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துமாறும் - தொற்றுநோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்றுமாறும் தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர். (352)

# வட்டக்கச்சிப் பிரதேசத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் பரவலாக சமகால அரசியல் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் நடைபெறும் இக்கருத்தரங்கின் இறுதியில் தமிழீழ மகளிர் இசைக்குழுவினரின் இசைநிகழ்வும் இடம்பெற்று வருகின்றது. பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றுவருகின்றன. (405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

தொலைத்தொடர்பு நிலையத்திற்குரிய அடைப்புப் பெட்டியுடன், ரெலிகொம் தொலைபேசி இணைப்பு, வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 222 5473. 86/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(50503)

## காணி விற்பனைக்கு

நாவற்குழியில் A9 வீதிக்கு அண்மையாக காணித்துண்டுகள் விற்பனையாகின்றன. அவசர நிதித் தேவைக்காக, தவணைக் கட்டண முறைக்கும் ஒழுங்குசெய்யலாம். தொடர்பு: நில அளவையாளர், 22216922, 077 676493.
(50541)

## கோழிக்குஞ்சு விற்பனை

**Prima No.1 Broiler** குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். **T.P.:** 222 6944.
(சி/49412)

## வீடு வாடகைக்கு

கொக்குவில் பகுதியில் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 021- 222 7031.
(50537)

## தவறிவிட்டது

சரசாலைக்கும் மந்திகைக்கும் இடையில் தங்கக் கைச்சங்கிலி ஒன்று 24.05.2006 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். வேலாயுதம் வசந்தகுமாரி. **T.P.:** 077 9172719, 077 3597163
(50540)

## எள் அறுவடை ஆரம்பமாகியது

நவாலி,மே26

நவாலியில் எள் அறுவடை வேலைகள் இப்பகுதி விவசாயிகளால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்முறை இப்பகுதியில் அதிக விளைச்சல் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
(100)

# மரண அறிவித்தல்

## சந்திரசேகரம் குருபரன் (குரு)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வதிவிடமாகவும் தற்காலிகமாக வெள்ளவத்தையில் வசித்தவருமான சந்திரசேகரம் குருபரன் 22.05.2006 அன்று கொழும்பில் அகால மரணமானார்.

அன்னார் சந்திரசேகரம் - காலஞ்சென்ற சரோஜினிதேவி தம்பதியரின் பாசமிகு அருமை புதல்வரும் காலஞ்சென்ற பொன்னம்பலம், கமலாதேவி (லண்டன்), காலஞ்சென்ற திருநீலகண்டன், செந்தாமரைச் செல்வி, சற்குணராசா, யசோதராதேவி, சிவதாசன் (கனடா), அஞ்சனாதேவி (கனடா), ஆகியோரின் பெறாமகனும் சாந்தினி, சுகந்தினி, சிவபரன் (லண்டன்), மாதினி ஆகியோரின் பாசமிகு அண்ணனும் பேபி (லண்டன்), பானு (லண்டன்), அழரி (லண்டன்), வச்சி (ஆஸ்திரேலியா), சிவா (லண்டன்), லிங்கன் (லண்டன்), நரசிங்கன் (லண்டன்), சயந்தன் (கனடா), ஜெயராம் (கனடா), சுபாஜினி (கனடா), தயாளன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜீவரேகா, ஜீவகாந், ஜெனார்த்தன், ஜீனத்தன், மிதுசன் ஆகியோரின் மாமானும் கிருஷ்ணமூர்த்தி, கங்காதரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

*வெள்ளவத்தை,*
*கொழும்பு.* (50546)(23-32-17-14)

தகவல் :
**குடும்பத்தினர். 011 5635166**

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே26

சரசாலை - நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்த பெரும் திருவிழா எதிர்வரும் இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி காலை 8 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே26

இணுவில் கந்தசுவாமி ஆலயப் பெரும் திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

தினமும் காலைப் பூசைகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12.30 மணிக்கு நிறைவடையும்.

மாலைப் பூசைகள் 3.30 மணிக்கு ஆரம்பமாகி 6.30 மணிக்கு நிறைவடையும்.

# தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அபிவிருத்திக்குமான அமைச்சு

**யாழ்.மாநகர சபைப் பிரதேச நீர் பாதுகாப்பு, சூழல் முகாமைத்துவத் திட்டம்**
**(நோர்வே அரசாங்கத்தினால் நிதிப்படுத்தப்பட்டது)**

## கேள்வி அறிவித்தல் - இல.06

## யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள புனரமைப்பு வேலைகள்

1. மேற்கூறப்பட்ட திட்டத்தின் கீழ், இதன் கீழ் தரப்பட்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகளுக்காக பகிரங்க கேள்விகள் இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும். தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அபிவிருத்திக்குமான அமைச்சின் செயலாளருக்காக யாழ். மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர் அவர்களால் மூடி பொறிவைக்கப்பட்ட கேள்விகள் 'எம் 7, எம் 8' இக்ராட் ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப்படுகின்றன.
2. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் இக்கேள்விகளுக்கான நியதிகளையும் நிபந்தனைகளையும் **திட்டப்பணிப்பாளர், NORAD, கச்சேரி, யாழ்ப்பாணத்தில்** பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி. இல. 021 - 222 6752.
3. ஒப்பந்த ஆவணங்கள் மே மாதம் 22ஆம் திகதியிலிருந்து யூன் மாதம் 05ஆம் திகதி வரை மு.ப. 9.30 இலிருந்து பி.ப. 3 மணிவரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ.500/- செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம்.
4. மேற்படி வேலைக்குரிய ஒப்பந்தப் பிணை முறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் இரு பிரதிகள் **தலைவர், மாவட்ட கேள்விச் சபை, NORAD, கச்சேரி, யாழ்ப்பாணத்திற்கு** 06.06.2006ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பதாகக் கிடைக்கவேண்டும். அதே தினம் பி.ப. 3 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் கேள்வி கோருபவர்/அவரது பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

விவர அட்டவணை

| இல. | புனரமைப்பு வேலைகளின் விவரம் குளங்கள் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | மீளளிக்கக் கூடிய ஒப்பந்தப் பிணைமுறி |
|---|---|---|---|
| 1 | புல்லுக்குளம் (JPO/WC/PO/01/15) | 07 | 70,000.00 |
| 2 | ஆரியகுளம் (JPO/WC/PO/01/30) | 07 | 70,000.00 |
| | **வாய்க்கால் தடுப்புச்சுவர்கள்** | | |
| 1 | கன்னாதிட்டிக் குளத்திலிருந்து வண்ணான் குளம் நுழைவாயில் வரை (JPO/WC/CH/01/11) | 08 | 30,200.00 |
| 2 | வண்ணான்குளம் வெளிவாயிலிருந்து மின்சார நிலைய வீதி வரையுள்ள பிரதான கால்வாய் வரை (JPO/WC/CH/01/16) | 08 | 9,800.00 |

*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*22.05.2006.*
(சி/49397)(32-17-14)

**க.கணேஷ்,**
**தலைவர், மாவட்டக் கேள்விச் சபை,**
**மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

THE HALO TRUST

## vacancy: Post of Interpreter

The Application should have following Qualifications:
* An Excellent command in English and Tamil
* Physically well fit
* Age : Should be less than 30 years
* Preferable lived abroad

The selected person should be prepared to visit Mine fields, to carry on interpretation work on full time basis.

Salary Negotiable

Please make an appointment (with contact Numbers) with in seven days.

To: **The Operations Manager,**
**The HALO Trust,**
**12, Nallur Cross Road,**
**Nallur, Jaffna.**
(50539)

care

# CARE International

## VACANCIES (LIFT PROJECT - Jaffna)

1. Officer -Admin / Finance (Programme support)
2. Project Officer- Social mobilization and Gender & Development

**Vacancies exist for the above positions. Those who are interested and possess the required qualifications, experience, and skills may send in their applications to reach the Human Resources Division on hrd@care.lk or No 15 Kandy Road Jaffna, Sri Lanka on or before June, 5, 2006.**

### 1. Officer -Admin /Finance (Programme support)

**JOB SUMMARY**

He/She is responsible for Area Office secretarial and financial work. Provide secretarial assistance to all project staff. Provide administrative and accountant support to the Area Office and contribute to effective office management. Supervise Area Office Drivers and Custodian. Responsible for procurement and management of Petty Cash as well as accountant related tasks.

**RESPONSIBILITIES AND TASKS:**

- Provide secretarial support to all aspects of Project and Area Office operations.
- Provide administrative support to ensure effective and efficient office management.
- Personnel/ Filing/ Office upkeep.
- Initiate and co-ordinate Area Office procurement in keeping with the guidelines of the Procurement Policy.
- Assist in the management and maintenance of the Area Office vehicle fleet.
- Maintain Petty Cash of the Area Office.
- Supervise Area Office Drivers and Custodian.

**REQUIRED QUALIFICATIONS AND COMPETENCIES**

Degree/ Diploma in Secretarial Studies preferred, Computer literacy in the use of window-based software (Word, Excel etc.) One year experience in a similar capacity

Competencies

Basic Accounting, Ability to work independently, Problem identification and solving skills, Computer skills, Very good written and spoken English and Fluency in Tamil and English

### 2. Project Officer- Social mobilization and Gender & Development

**Job summary**

S/he will strengthen CBOs also by training group leaders to increase their capacity to identify and resolve their issues, provide strong leadership to the groups, and engage in dialogue with relevant decision makers. S/He will develop linkages between CBOs and groups that provide psychosocial support. S/he is also responsible for collecting the data required through from the M&E system. S/He will liaison with local government, NGOs, and service providers to help develop links between the CBOs and service or resource providers. The PO: SM/GAD works under the direction and supervision of the SM/GAD Co-coordinator (through the DPD).

85% of the time is spent implementing the project activities in the field. 15% of the Time will be in the office, preparing reports and updating database.

**REQUIRED QUALIFICATIONS AND COMPETENCIES**

Social Science, Psychology, or other relevant Bachelor's degree with at least one year of relevant experience, OR Diploma / Certificate in sociology or Psychology and three years experience.

The Social Mobilization Trainer will have skills in social mobilization and community development, as well as extensive experience in working in the conflict affected areas. Training in the psychosocial field would be of great benefit.

- Excellent interpersonal, communication, training, and team building and team working skills.
- The ability to communicate (verbal and written) in Tamil and English.
- Proficient in the use of basic computer programmes (Microsoft Office)
- Highly developed problem solving and conceptual skills and the ability to innovate.
- The ability to work in remote areas with extensive travel by motorcycle over poor roads.

(C/49466)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவற்குழி
அற்புத அன்னை ஆலய கட்டட நிதிக்கான
அதிர்ஷ்டலாபச்சீட்டு முடிவுகள்

முதலாம் பரிசு - பற்றுச்சீட்டு இல. 2260
2ஆம் பரிசு - பற்றுச்சீட்டு இல. 603
3ஆம் பரிசு - பற்றுச்சீட்டு இல. 519

பரிசுக்குரியவர்கள் புனித லிகோறியார் ஆலயம், கச்சாய் வீதி, சாவகச்சேரியில் பங்குத்தந்தையிடம் பற்றுச்சீட்டுக்களை வழங்கி பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி
(50535) (23-32-11-17) - பங்குத்தந்தை.



கரவெட்டி பிரதேச செயலக
உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம் நடத்தும்
அதிர்ஷ்ட இலாபச்சீட்டு

19.05.2006 ஆம் திகதி நடைபெறவிருந்த அதிர்ஷ்டம் பார்க்கும் திகதி, தவிர்க்கமுடியாத சூழ்நிலையால் எதிர்வரும் 09.06.2006 (வெள்ளிக்கிழமை) பி.ப.3.00 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்பதை நண்பர்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
(சி.49415)(23-32-11-17) பிரதேச செயலகம் - கரவெட்டி.


# மரண அறிவித்தல்கள்

## பேரின்பமணி சிதம்பரநாதன்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமாகிய திருமதி பேரின்பமணி சிதம்பரநாதன் அவர்கள் நேற்று 25.05.2006 காலமானார்.

அன்னார் சிதம்பரநாதன் (காயத்திரி காட்வெயார், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அம்பலவாணர் - ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னையா - செங்கமலம் தம்பதியரின் அன்பு மருமகளும் பிரேமாவதி (லண்டன்), ராதிகா, சிவதாஸ் (சுவிஸ்), வனஜா (கனடா), கிரிஜா, பிரமிளா ஆகியோரின் அன்புத் தாயும் பிரேமசுதன் (லண்டன்), தங்கராசா (கொழும்பு), ராகுலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

25/3/2, ஈ.எஸ்.பெர்னான்டோ மாவத்தை,
வெள்ளவத்தை, கொழும்பு - 6,
T.P.: 0114510609.

தகவல் :
சி.சிதம்பரநாதன் (கணவர்).
(50553)(32-11-17)

## திருமதி மாணிக்கம் ஸ்ரீஸ்கந்தராசா

வரணி, இடைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் கடந்த 21.05.2006 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஸ்ரீஸ்கந்தராசா (முன்னாள் விவசாய திணைக்கள அலுவலர்) இன் அன்பு மனைவியும், ஸ்ரீதரன் (கொழும்பு), சுபோதினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 22.05.2006 திங்கட்கிழமை வரணியில் இடம்பெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இடைக்குறிச்சி,
வரணி.

தகவல்:
சுபோதினி (மகள்)
லண்டன்.
(50551)(32-11-17)


சீட்டிழுப்பு இல. 1712

24.05.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

07 15 45 55 (16)

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 201177140 இலிருந்து 201192456
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 80,55,900/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 80,55,900/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 2 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 27 | 5,000/- | 1,35,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 402 | 1,000/- | 4,02,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,288 | 500/- | 6,44,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 19,915 | 40/- | 7,96,600/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 18,822 | 20/- | 3,76,440/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,81,452 | 10/- | 28,14,520/- |
| மொத்தம் | | | 71,68,560/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், பைசிக்கிள் | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,21,913 | | 77,68,560/- |

தொடர் இல. 301096953 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கெட்டுக்கள் 2006 மே மாதம் 27 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 88,08,200/-

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கல் அடங்கிய பரிசு முதியை வென்றெடுத்த 5 டிக்கெட்டுக்களின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| அம்பாறை | 201180799-3-00 |
| கம்பஹா | 201181550-1-45 |
| காலி | 201186987-2-43 |
| [illegible] | 201188883-1-28 |
| கொழும்பு | 201191404-3-85 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 31, சென்ற் மைக்கேல்வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03



ராஜா யாழ்ப்பாணம்
இன்றுமுதல் பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த
பட்டியல்
புதிய வெளியீடு
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்



நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும்
கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜக்சனின்
கிங் - கொங் King Kong
தங்கத் தமிழ் மொழியில்
(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)
காட்சி நேரம் : 10.30, 2.30


# கண்ணீர் அஞ்சலி



எங்கள் பிரதேச செயலக
கலாசார பேரவையின் முன்னாள்
செயற்குழு உறுப்பினர்
திருமதி
மங்கையர்க்கரசி
திருச்சிற்றம்பலம்

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து துயரடைகின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் மறைவினால் துயருறும் குடும்பதினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

கலாசார பேரவை,
பிரதேச செயலர், உடுவில்.
(50556)(32-11)


FACULTY OF ARTS
UNIVERSITY OF JAFFNA

Commencement of
Academic Programme for
Bachelor of Law Students

The lectures for Bachelor of Law students for First Year - 2nd Semester will be continued from 29th May, 2006. All first year Law students are requested to attend the lectures.

(C/49418) Registrar.


# கண்ணீர் அஞ்சலி

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி
ஆசிரியை
திருமதி த.சுவாமிநாதனின்
அன்புத் தாய்
திருமதி சின்னராசா கனகம்மா
அவர்கள் இறைபதம்
நண்ணியமையையிட்டு எமது
அஞ்சலியைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.

ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி,
புத்தூர்.
(சி/49414)(32-11-17) நலன்புரிக் கழகம்.

# மரண அறிவித்தல்

## வேலன் முருகேசு

சரசாலை மத்தியைச் சேர்ந்த வேலன் முருகேசு அவர்கள் 23.05.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மா, நாகம்மா (மணி) ஆகியோரின் அன்புக் கணவரும் மனோகரன், மாலா (லண்டன்), யோகேந்திரன் (டோகா), மகேந்திரன், சிவசக்தி, ஜெயராணி (கனடா), மகாசெல்வன், மதியழகன் (கனடா), மயூரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருமைத்துரை (லண்டன்), சந்திரலோனா (கிளி), றஞ்சனா (ஆசிரியை), சுகந்தி, பூமாதேவி (கனடா), இராசநாயகம் (கனடா) ஆகியோரின் மாமனும் மோதீஸ், காயத்திரி, கஸ்தூரி, நிஷாந்தன், தர்ஷன், சமீரன், அர்மினா, கவிநயா, கேனுஷன், கிஷானா, எழிலன், கிளின்ரன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் பொன்னம்பலம், நேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சி.சபாபதியின் மைத்துனரும் பாலகுமார் (கனடா) அவர்களின் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 25.05.2006 சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]
சாவகச்சேரி.
(32-11-17)

தகவல்:
சி.சபாபதி
தொலைபேசி: 077 6687821.


திட்டக்கணக்காளர் பதவி வெற்றிடம்

சேவாலங்கா நிறுவனம், இல.72, திருநகர் வீதியில் அமைந்துள்ள காரியாலயத்திற்கு இரண்டு திட்டக் கணக்காளர் பதவிக்கான வெற்றிடங்கள் உள்ளன. தகுதி வாய்ந்தவர்கள் விண்ணப்பிக்கவும்.

தகுதிகள்:
1. கணக்கியல் பட்டதாரி - ஒரு வருட திட்டஅனுபவம் (ஏதாவது அரச சார்பற்ற நிறுவனத்தில் கணக்காளராகக் கடமை புரிந்த அனுபவம்.
2. ஆங்கிலத்தில் சரளமாக உரையாடவும், மாதாந்த மற்றும் இறுதிக் கணக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் அறிவு.

அல்லது

1. ஆகக்குறைந்த 4 வருடம் அரசசார்பற்ற நிறுவனத்தில் கணக்காளராக கடமை புரிந்த அனுபவம்.
2. ஆங்கிலத்தில் சரளமாக உரையாடவும், மாதாந்த மற்றும் இறுதிக் கணக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் திறன்.

பொதுவான தகுதிகள்:
இவர்கள் கிளிநொச்சியில் தங்கிருந்து வேலை செய்யக்கூடியவர்களாக இருக்கவேண்டும். முன் அனுபவம் அற்றவர்கள் தெரிவுசெய்யப்படமாட்டார்கள்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய இறுதி திகதி 01.06.2006

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:
வடபிராந்திய வெளிக்களப் பணிப்பாளர்.
சேவாலங்கா மன்றம், சுனாமி காரியாலயம்,
இல.72, திருநகர், கிளிநொச்சி.

Fax No: 0212283957
(சி.49417)(23-32-11-17)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
நாகலிங்கம் பரம்சோதி

| தவப்பேறு | சிவப்பேறு |
|---|---|
| 03 - 08 -1931 | 26 - 04 -2006 |

திருநெல்வேலி, அம்மன் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட அமரர் நாகலிங்கம் பரம்சோதி அவர்கள் அரனடி சேர்ந்து இன்று 31 நாள்கள் ஆகின்றன. நெஞ்சிலே வாமை இருத்தி நினைவுகளில் என்றென்றும் நிறைந்து நீங்கள் நினைவோடு கண்ணீர்பனிப்பு கடமை உணர்வை கருத்தினில் அமர்த்தி கனத்த இதயத்தோடு முக்கண்ணன் பாத மலர் இருக்கவேண்டும்.

பரிஜின் டிசைன் குறுப்,
இல.100, அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.
(50555) (26-32-11-17)

மனைவி, மகன்,
மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி

யா/இராமநாதன் கல்லூரி முன்னாள் அதிபரும் பழைய மாணவர் சங்க மூத்த உறுப்பினருமாகிய

## திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்

அம்மா அவர்களின் மறைவிற்கு ஆழ்ந்த அனுதாப அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம். அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.
(50524) (23-32-11-17)

# கண்ணீர் அஞ்சலி

**கந்தையா இராமநாதன்** (ஓய்வுபெற்ற ஓவசியர் P.W.D.)

23.05.2006 இரவு எமது அன்பிற்கும் மதிப்பிற்குரிய கந்தையா இராமநாதன் அவர்கள் காலமானார். அன்னாரின் இழப்பு பேரிழப்பாகும். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துகொள்கிறோம்.

பலாலி வீதி,
கோண்டாவில்.
(50531)(23-32-11-17)

பாலகிருஷ்ணன் -
சாந்தினி தம்பதிகள்,
ப.அம்பிகைபாலன்
(சோதி ஸ்ரோஸ், கோண்டாவில்).

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்நாடலங்கரித்த நாள் | திருநாடலங்கரித்த நாள் |
|---|---|
| 08 - 02 - 1932 | 26 - 04 - 2006 |

திருமதி **மேரிபாக்கியம் சின்னத்தம்பி** (சில்வி)




(50519)(23-32-11-17)

அன்னாரின் 31 ஆம் நாள் நினைவு தினத்தை ஒட்டி இன்று (26.05.2006) வெள்ளிக்கிழமை ந.ப. 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் நன்றித் துதி ஆராதனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிறவுண் வீதி, கொக்குவில்.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டினால் கடற்றொழில், விவசாயத்தில் பாதிப்பு

அரியாலை,மே 26

குடாநாட்டில் மண்ணெண்ணெய்க்கு நிலவும் தட்டுப்பாட்டினால் விவசாயம், மற்றும் கடற்றொழில் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

குடாநாட்டுக்கு குறைந்தளவு மண்ணெண்ணெய் வந்து சேர்வதனால் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் காங்கேசன்துறை எரிபொருள் நிரப்பும் களஞ்சியம் குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மண்ணெண்ணெய்யை விநியோகிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.(17)

## களுவாஞ்சிக்குடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் சிலரைத் தாக்கியுமிருக்கின்றனர்.

கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்டத் துணைத் தளபதி ரமணனின் இறுதிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றதால் அதனையொட்டி களுவாஞ்சிக்குடி நகரிலுள்ள கடைகள் அனைத்தும் அன்று பூட்டப்பட்டிருந்தன. அதற்குத் தண்டனையாகவே படையினர் கடைகளை மேலும் 2 நாட்களுக்கு மூடும் உத்தரவை விடுத்திருக்கின்றனர். (க)

## செட்டிக்குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவத்தையடுத்து செட்டிக்குளம் பகுதியில் இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டனர். (க)

## போவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இன்று பேச்சுக்களை நடத்தவுள்ள சொல்ஹெய்ம் இதர அரசியற் கட்சிகளின் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார். (க)

## கொக்குவில் - குளப்பிட்டி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெடித்துள்ளது. இதனால் கடை பலத்த சேதமடைந்தது. சம்பவம் இடம்பெற்றவேளை கடையில் இருந்த அதன் உரிமையாளரும் பொருள்களைக் கொள்வனவு செய்யவந்த 11 வயதுச் சிறுமி ஒருவரும் மயிரிழையில் உயிர் தப்பினர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த சிப்பாயினது சடலம் உடனடியாக பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. சம்பவம் இடம்பெற்ற பகுதியில் உள்ள கடைக்கு பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு வந்த கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சிவானந்தன் சிவகுமாரன் (வயது - 40) என்பவரே இந்தத் தாக்குதலில் சிக்கி உயிரிழந்தார்.

யாழ்.ஆஸ்பத்திரியில் தனியார் சுத்திகரிப்பு மேற்பார்வையாளராக கடமையாற்றும் இவர் நேற்று மாலை கடமை முடிந்து வீடு திரும்பி பின் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக சென்ற போது இந்த அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்தார்.

நேற்று முன்னிரவு சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணைகளை நடத்தினார். உயிரிழந்த பொதுமகனின் சடலத்தை யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (78)

## களமுனைத் தளபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தார். இவரது வித்துடல் நேற்றுமுன்தினம் மாலை கிளிநொச்சியிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அங்கு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பருதி மற்றும் புலிகளின் தளபதிகள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் வீரமணியின் வித்துடலுக்கு அஞ்சலி செலுத்தினர். (த)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



எமது

இரணைச் செல்வங்கள்



க.பிரநிலா க.பிரநிஜா

அவர்களின் முதலாவது பிறந்த நாள் நிகழ்வு இன்று (26.05.2006) வெள்ளிக்கிழமை அவர்களின் நுணாவில் சாவகச் சேரி இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றனர். இவர்களை பல்கலையும் பெற்றுச் சிறப்புற வாழ்த்துகின்றோம். (50568)

077 6170686 (குமார்), 077 9595082 (கமல்) மாமன் குடும்பத்தினர்.


# மரண அறிவித்தல்கள்

## சிவானந்தன் சிவகுமாரன்

புலோலி கிழக்கு பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் நாகலிங்கம் லேன், கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட சிவானந்தன் சிவகுமாரன் (யாழ்.போதனா வைத்தியசாலை) நேற்று அகால மரணமானார்.

அன்னார் சிவானந்தன் (தபாலதிபர், நிர்வாக காரியாலயம், யாழ்ப்பாணம்) தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் மாதினியின் (மாலா) அன்புக் கணவரும் கோகுலனின் அன்புத் தந்தையும் சிவகெங்கா (யாழ்.போதனா வைத்தியசாலை), சிவரஞ்சினி (ஆயுர்வேத வைத்தியர்), சிவசங்கர் (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணேசநாதனின் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) சகலனும், காஞ்சனாவின் மைத்துனரும் பாக்கியநாதன் செல்வநாயகி தம்பதியரின் பெறாமகனும் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த நடராசாவின் (அப்பையா) அன்பு மருமகனும் சின்னப்பிள்ளையின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகலிங்கம் லேன்,
கொக்குவில் மேற்கு.

தகவல்:
தி.சிவானந்தன் (தந்தை)

## சபாபதிப்பிள்ளை ஜெயபாலன்

(சாலைப் பரிசோதகர், இ.போ.ச., காரைநகர் சாலை)



அராலி மத்தியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை ஜெயபாலன் அவர்கள் நேற்று (25.05.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை - நாகரத்தினத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் தர்சினியின் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் பகீரதி, கௌசலா, சகுந்தலா, புஸ்பரூபா (3ஆம் வருடம் வரலாறு, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.05.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் அராலி மத்தி இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக பூநாவாடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (50569)

அராலி மத்தி,
வீரபத்திரர் கோயிலடி, வட்டுக்கோட்டை

தகவல்:
தாய், மனைவி, சகோதரி


நந்திவேல்
(யா/இந்து மகளிர் கல்லூரிக்கு அருகே)
A/L2007
LOGIC
பகுதி II
ஆரம்பம்:- 28.05.2006 ஞாயிறு காலை 8 மணி
A/L 2007, 2008 அனைத்துப் பாடங்களும் ஆரம்பம்.
தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.

கலைவாணி
LOGIC
A/L 2008
Sat, Sun 3 p.m
ஆரம்பம் : 28.05.2006
P.கமல்

BRIGHTMAN
யாழ்.
LOGIC
A/L 2007
பகுதி II
ஆரம்பம்: Sun 12 p.m
29.05.2006
P.Kamal

ஐடியல் அக்கடமி
கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்
SPOKEN ENGLISH WITH GRAMMAR
By:V.விஜயபாஸ்கர்
ஆரம்பம்:27.05.2006
மாலை 4.30 மணி
O/L Day Class
நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன
Note: இந்த மாதக் கட்டணம் Free

ஸ்ரார்
கல்வி நிலையம்
சுன்னாகம்
O/L
Day Class
பிரிவு II
ஆரம்பம்:29.05.2006
திங்கள் - 8.00 A.M
பிரிவு I
அனுமதி நிறுத்தப்பட்டுவிட்டது.

விக்னா கல்வி நிறுவனம்
A/L 2008
கலை, வர்த்தக வகுப்புகள்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன.
சனி 8.00 மணி
A/L 2007
வழமையான நேரப்படி நடைபெறும். (சி/49387)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி காந்திமதி சந்திரசேகரம்

திருமதி காந்திமதி சந்திரசேகரம் அவர்கள் நேற்று (25.05.2006) வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரத்தின் மனைவியும் உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திருதிருமதி சின்னத்தம்பி யோகசரஸ்வதியின் ஏக புதல்வியும் திருவாரூரன்(கனடா), திருவரங்கன் ஆகியோரின் அன்புத் தாயாரும் உசாமினியின் (கனடா) மாமியாரும் சுரேகாவின்(கனடா) பேர்த்தியாரும் மற்றும் கனகசபை(கனடா) காலஞ்சென்ற சிறிகாந்தனின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.05.2006) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் இருளன் மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார் வளவு,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய் (50539)

தகவல்:
இராசரத்தினம்,
பகீரதன் (சகோதரன்)

## கந்தையா சுப்பிரமணியம் (காராளி மணியம்)



சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (25.05.2006) வியாழக்கிழமை நண்பகல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - வியாழாட்சி தம்பதியரின் அன்புப் புதல்வரும் சின்னம்மா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகசபையின் (காராளபிள்ளை) சகோதரரும் மற்றும் மகேஸ்வரி இராஜலட்சுமி, ஜெகதீஸ்வரன் (கணேசு), தேவபாலன் (நடேசு) ஆகியோரின் சிறிய தந்தையும் Dr.குருபரன், ரேணுகபதி (Care), மயூரன் (பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான்) சஞ்சயன், சோபனன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2006) முற்பகல் 10 மணியளவில் துர்க்கையம்மன் வீதி நுணாவில் கிழக்கு சாவகச்சேரியில் உள்ள தற்காலிக வசிப்பிடத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி. (50562)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சிற்றம்பலம் சிவகாமிப்பிள்ளை

இரங்கணிய வளவு, குருநாத சுவாமி கோயிலடி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் முத்தட்டு மட லேன், கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் சிவகாமிப்பிள்ளை அவர்கள் நேற்று (25.05.2006 ) வியாழக்கிழமை மதியம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற வைத்திலிங்கம், செல்லம்மாவின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற சிற்றம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தவராஜா, தயாளமலர், பிரேமவதிராணி (கனடா), காலஞ்சென்ற புஸ்பராணி, சண்முகநாதன் (கனடா), காலஞ்சென்ற சிவநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் மனோரஞ்சிதமலர், தியாகராஜா, காலஞ்சென்ற பத்மநாதன், செல்வயோகினி (கனடா), கௌரி (கனடா), ஆகியோரின் அன்பு மாமியும், திருவேந்தன், எழில்வேந்தன், பத்மவேந்தன், பத்மதர்சினி, பத்மஜனனி, புருசோத்தமன், தாரணி, வாணி, கல்யாணி, கோபிதாஸ், கலையரசி, எழிலரசி, பொன்னம்பலம், மதுமிதா, ஹரிஷன், ஆரணி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஷப்ராஜ், வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்தட்டு மட ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு
தொ.பே. 077 9050155 (50567)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள் (வவா)

## திருமதி பொன்னு அன்னம்

கட்டைவேலி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னு அன்னம் 24.05.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பர் - இலட்சுமியின் ஏக புத்திரியும் சண்முகம் (பிஸ்கால்), சரவணமுத்து (ஆசிரியர்), சின்னத்தம்பி, குழந்தைவேலு (பொலீஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கப்பாக்கியத்தின் தாயும் சந்திரமோகன், வசந்தராசன், மனோகரன், சிறீகரன், பாஸ்கரன், ஜெயகாந்தன், ஜெயசீலன், ஜெயறிசன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (27.05.2006) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குடும்ப மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டைவேலி,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. (சி-49422)

தகவல்:
கி.ஜெயசீலன் (பேரன்).


EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...





யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) … வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org